தென்மொழி

# இந்தியப் புலத்தினில் புரட்சி மேகங்கள்!

புரட்சி மேகங்கள் இந்தியப் புலத்தினில்
திரட்சி யுற்றுத் தென்படு கின்றன!
மருட்சி யுற்ற அரசியல் மாண்புகள்
மிரட்சியால் மக்களை மேயக்கப்பார்க் கின்றனர்!

புதுமை மின்னின! கருத்துகள் முழங்கின!
பொதுமை காணும் போக்குகள் மலிந்தன!
கிளர்ச்சி! கிளர்ச்சி! எங்கணும் கிளர்ச்சி!
தளர்ச்சியுற் றிருந்தவர் தணலாய்க் கிளம்பினர்!
வளர்ச்சி வேண்டி வகைசெயக் கோரினர்!
குளிர்ச்சி விட்டிடச் சூடு கிளர்ந்தது!
இலகும் இழிவுகள் இழப்புகள் நீங்கிட
உலக மாந்தர் கலகம் விளைத்தனர்!

பலமொழி! பலஇனம்! பலபண் பாடுகள்!
குலங்கள் கோடி! மதங்கள் பற்பல!
எத்தனை நாளைக்கு இணைந்து கிடந்திடும்?
செத்துக் கிடந்தவர் சீறி எழுந்தனர்!
ஒவ்வொரு தேசிய இனமும் உயிர்த்தது!
எவ்வொரு விளைவும் 'எல்லார்க்கும்' என்றது!

ஆண்ட இனத்தவர் அரண்டனர்! அழன்றனர்!
பூண்ட அதிகாரம் புதுக்கினர்! அடக்கினர்!
அடிகள்! உதைகள்! அழல்வாய்க் குண்டுகள்!
வெடிகள்! பிணங்கள்! வேடிக்கைத் தீர்ப்புகள்!

கொடிகள் விரிந்தன! கூட்டங்கள் நிறைந்தன!
இடிமுழக் கங்கள் இன்னும்கேட் கின்றன!
மேகப் புயல்கள் விண்விட் டிறங்கின!
வேகச் சீற்றம்! விடியலுக் கேங்கின!
புரட்சி மாமழை பொழிந்திடப் போகும்!
வரட்சி நீங்கிடும்! வரலாறு மாறுமே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 20
ஓலை : 11
விலை 1.25 உ.(ரூ)

# நமக்கு வந்த மடல்கள்.

0: 1016 : பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம், மீண்டும் மீண்டும் ஏன் தேவையற்றதையெல்லாம் உங்கள் மீது உறுத்து மாறு சிலர் கூறி வருகின்றனர்? சீரோர் இயல்பு அதுவெனத் தாங்கள் உணர்ந்ததுதான், அதை உணராமல் இருக்கின்றனரே என்பதுதான் வருத்தப்பட வேண்டியதாய் இருக்கிறது.

— சி.நா. செந்தமிழ்ச்செல்வன், வேங்கைவாடி.

0: 1017 : தென்மொழி ஓலை. 9-10 (சுவடி 20) கிடைத்தது நேற்று! அதில் விடுதலை(கெடுதலை)விரும்பி என்பார் பற்றி அன்பர் ஒருவர் வரைந்த மடலை வெளியிட்டது சரியன்று. எவரோ கதை கட்டிக்கொண்டிருக்கட்டும். அதற்காக அவற்றைத் தென்மொழிப் பக்கங்களில் வெளியிட்டு ஏன் நாம் நம் பக்கங்களை வீணடிக்க வேண்டும் என்பது தெரியவில்லை! இப்படி வெளியிட்டால்தான் அவரைப்பற்றி மற்ற அன்பர்களும் புரிந்து கொள்வர் என்பதற்காகவா? முன்பு ஐயா அவர்கள் 'என்னைப் பற்றி நானே கேள்விப்படுவது' எனுந் தலைப்பில் எழுதிய போதும் நான் இவர்களைப்பற்றிய எண்ணம் தங்களின் சிந்தனைச் கூட்டைக் கலைக்கக் கூடாது என்று மடல் வரைந்திருந்தேன். அருள்கூர்ந்து மடல்களை 'சிறந்த' தணிக்கைக்குப்பின் (இப்படிப்பட்ட செய்திகளை வெட்டி) வெளியிடலாம்.

ஒரு (நாலாந்தர) 'நா' வணிகரைப்பற்றியும், அவரின் கூற்றுக்காகவும் நாம் விடை சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம்! புலமைக்காய்ச்சலில் பலரும், இன்று, புகழ்க்காய்ச்சலில் பல கட்சிகளும் வதங்கிக் கொண்டுள்ள நிலையை இப்போது வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொள்கிறார்கள், தங்களைத் தாங்களே! உ.த.மு.க.வின் வளர்ச்சியைத் தடுக்க இயலாது. அஃது அணை கடந்த வெள்ளமாக ஆனால், பயிர்காக்கும் நன்னீராக பெருகி வழியும்! விட்டில் பூச்சிகளே விளக்குகளை அணைக்க நினைந்து வெந்தணலில் மாயாதீர்! நீங்கள் தொட்டில் பூச்சிகள்!

அன்புடன், — க. கதிர்குன்றன், அமரர்பூண்டி.

0: 1018 : அன்புமிக்க ஐயா அவர்கட்கு, வணக்கம். நெடு நாள்களாகக் கடிதம் எழுத நினைத்திருந்தேன் இயலவில்லை. தாங்களும், மற்றையோரும், நலமுடன் திகழ்வீர்கள் என நம்புகிறேன்.

இத்துடன் உரு 1001/-ற்கான வரைவோலை உள்ளது பெற்றுக் கொண்டு கடிதம் எழுத வேண்டுகிறேன். இதில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களுக்கான வாழ்நாள் கட்டணம் போக மிகுதியை என் நன்கொடையாக மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். (பயன், விளம்பரம் ஏதும் வேண்டிலேன்.) தங்களின் எழுச்சிமிக்க பாடல்களால், கட்டுரைகளால் கவரப்பட்டவன் நான். தாங்களும், தங்கள் சுற்றமும் பல்லாண்டு நல்வாழ்வு வாழ்ந்து, தமிழுக்கு மேன்மேலும் பல சீரிய தொண்டுகள் புரிய வேண்டிக் கேட்டுக் கொண்டு அவ்வாறே வாழ்த்துகிறேன்.

பிற தங்கள் நலமறிந்து, தங்களன்புள்ள,
— பர். சி. இராமச்சந்திரன், கரூர்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]*



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் விடுதலை அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே ஆகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

---

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன் தென்மொழி நா. இளமாறன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:20] உ௦கரு மடங்கல் - ஆக-செப் - 84' [ஓலை - 11

# மன்னவனும் நீயோ? வளர்தமிழும் உன்னதோ? உன்னை அறிந்தோ, தமிழும் ஓங்குவது?



கடந்த ஆக. 28-ஆம் பக்கல், சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தின் 'வளர்தமிழ் மன்றத்' 'தொடக்கவிழாவில் கல்வி அமைச்சர் அரங்கநாயகம், தமிழ் வளர்ச்சித் தொடர்பாக அரசு செய்துவரும் முயற்சிகள் பற்றிச் சில தவறான கருத்துகளைக் கூறியிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாக உள்ளது. அவர் அங்குக்

கூறிய இரண்டு கருத்துகள் அவரின் தமிழ்ப்பற்றின்மையைத்தெளிவாகப் புலப்படுத்துகின்றன. அவை இவை :

1. பொதுமக்கள் ஆதரவு போதுமான அளவுக்கு இல்லாததால் எல்லா நிலைகளிலும் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுவர முடியவில்லை. தமிழ் முதுகலை வகுப்பிலும், இளங்கலை வகுப்பிலும் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை பெரிய அளவில் குறைந்து வருகிறது. மாணவர்கள் இதனை விரும்பிப் படிக்க முன்வரவில்லை. இருப்பினும் அரசு தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவே இத்துறைக்குப் பணம் செலவிடுகிறது.

2. தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் சார்பில் தமிழ் அகராதி உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அகராதி தூய தமிழ்ச் சொற்களைக்கொண்ட அகராதியாக இருக்க வேண்டும் என்று தமிழ்ப் படித்தவர்களெல்லாம் கருதுகிறார்கள்.

ஆனால், அகராதி என்பது பொதுவான (சாதாரண) மக்கள் படித்துப் பொருள் தெரிந்து கொள்வதற்காகத்தான் என்பதை இவர்கள் மறந்துவிடக் கூடாது. தூயதமிழ் அகராதி உருவாக்குவது என்பது இந்தப் பிறவியில் (ஜன்மத்தில்) முடியாதது.

அவர் கூறிய இவ் விரண்டு கருத்துகளும் உண்மையான தமிழ்ப் பற்றில்லாமலும், நோக்கத்தைச் சரிவர ஆராயாமலும் கூறுகிற பொதுவான கருத்துகளாகும் என்பதை மேலோட்டமாகப் பார்த்தாலே விளங்கிவிடும்.

தமிழை நாம் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டு ஏறத்தாழ இருபத்தெட்டு ஆண்டுகள் ஆகின்றன. இதனை ஆட்சி அரசு அறிவித்த பொழுது பொதுமக்கள் ஆதரவைத் தெரிந்து கொண்டா அறிவித்தது? இந்திய அரசு பதனளவு (மெட்ரிக்) முறையை அறிவித்து, நயாபைசா நாணய முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்ததே, அப்பொழுதெல்லாம் பொது மக்கள் ஆதரவை அறிந்து கொண்டா அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது? அப்பொழுதெல்லாம் பொதுமக்கள் அவற்றை எவ்வளவு வெறுத்து ஒதுக்கினார்கள். செய்தித்தாள்களில் எத்துணை மறுப்புக் கட்டுரைகள் வெளிவந்தன.

இவ்வளவு ஏன்? இப்பொழுதுள்ள தமிழக அரசு மதுவிலக்கை எடுத்ததே, அதைப் பொதுமக்கள் ஆதரவை அறிந்துகொண்டா செய்தனர்? எழுத்துச் சீர்திருத்தத்திற்கு எந்தப் பொதுமக்களின் ஆதரவை அல்லது வரவேற்பை அரசு எதிர்பார்த்தது?

அரசுக்கு நல்லனவாகப்படும், மக்களின் எதிர்கால முன்னேற்றத்திற்காக என்று கருதும், அனைத்துக் கொள்கைகளையும் பொதுமக்கள் வரவேற்கிறார்கள், அல்லது மறுக்கிறார்கள் என்று அறிந்து கொண்டு செய்ய முற்படுவதில்லை. இந்தவகையில் அரசின் ஆசையும் கூட செயற்படுவதில்லை. ஆசை என்ன ஆசை? தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டுவர வேண்டும் என்பது

ஆசையின்பாற்பட்டதாக அரங்கநாயகம் எவ்வாறு கூறுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

அரங்கநாயகத்திற்குப் பல்வேறு ஆசைகள் இருக்கலாம்; அல்லது இல்லாமற் போகலாம். அஃது அவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. அவற்றுக்கெல்லாம் அரசைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. ஆனால், அரசு ஒன்றுகூடி, அறிஞர்களின் அறிவு அடிப்படையிலான கருத்தை, பொது மக்களுக்கும் அவர்களின் எதிர்காலத்திற்கும் நல்லது என்று கருதும் நடைமுறைகளைச் செயல் படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை; இருக்க முடியாது. ஒரு நல்ல கருத்தைப் பொதுமக்கள் அனைவரும் முன்கூட்டியே விளங்கிக் கொள்வார்கள் என்று எதிர் பார்க்கவும் முடியாது. சில கருத்துகளை அவர்கள் வரவேற்கவும் செய்யலாம்; எதிர்க்கவும் செய்யலாம். மதுவிலக்கைப் பொது மக்களும் அறிஞர்களும் வரவேற்றார்கள். அரங்கநாயகம் அரசு அதை ஏன் எடுத்தது? கொள்ளையடிப்பதற்காக! இதை அரங்க நாயகம் அறியாதவரல்லர்.

எனவே, தமிழ் பயிற்சிமொழியாகக் கொண்டுவரப் பெற்றது அல்லது அரசு ஏற்றுக் கொண்டது என்றால், தமிழ் ஆட்சிமொழிக் கொள்கையை முழுமையாகச் செயற்படுத்துவதற்காகத்தான். இனி, அஃது ஏன் ஆட்சிமொழியாக ஆகவேண்டும் என்றால், இது தமிழ்நாடு; நாமெல்லாம் தமிழர்கள் என்பதற்காகத்தான். (அரங்கநாயகம் வேண்டுமானால் தமிழரல்லாமல் அல்லது தமிழர்க்குப் பிறந்தவராக அல்லாமல் இருக்கலாம்! ஆனால் அது வேறு செய்தி) இங்கு, தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும், அவன் மொழியில் படிக்க வேண்டிய தேவையுண்டு; கட்டாயம் உண்டு. ஏனெனில், அவனவன் நாட்டில்- மாநிலத்தில் அவனவன் தாய்மொழியில்தான் கல்வி நடைபெறுகிறது. இஃது, ஏதோ அரங்கநாயகத்தின் தனிப்பட்ட ஆசையால் விளைந்த கருத்து அன்று; அவர் பார்த்து இட்ட கொடையும் அன்று; இதற்கான செலவும் அவரின் அப்பன் வீட்டிலிருந்து கொண்டு வந்த பணத்தால் ஆவதும் அன்று. அவ்வாறிருக்கையில், ஏதோ, தடுக்கிவிழுந்து தண்ணீர்ப் பானையில் கைவிட்டது போல, அரசப் பதவி பெற்றவுடன், தான் நினைக்கும் கருத்தெல்லாம் ஏதோ போதி மரப் புத்தன் கருத்தாக வெளிப்படுத்தி விடுவது நல்ல அறிவுடைமையாகி விடாது. அது காரறிவாண்மைக்குப் பொருந்திய கருத்தாகும்.

இனி, தமிழ்ப் பயிற்றுமொழியை மாணவர்கள் வரவேற்க வில்லை என்று இவர் கூறுவது ஏன் என்றால், அதையும் விளக்கிக் கூறவேண்டியிருக்கிறது. முதலில் நாம் தமிழர் என்பதற்காகவோ நாம் தமிழ்ப் பற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதற்காகவோ, தமிழில் படிக்க வேண்டும் என்ற ஓர் ஆசை காரணமாகவோ, தமிழ்ப் பயிற்சிமொழியாக வேண்டும் என்று எவரும் கருதவில்லை. இது தமிழ்நாடு. அஃதாவது தமிழர்கள் வாழ்கிற நாடு. இங்குள்ள வர்களுக்குத் தமிழ்மொழியே தாய்மொழி. அதனால் தமிழில்தான்

கல்வி கற்பிக்கப்பெறவேண்டும். இதில் ஆசைக்கு இடமே இல்லை அறிவுக்கும் உணர்வுக்குந்தான் முதாமை. அரங்கநாயகம் இல்லாமற்போனால் வேறு ஒரு குரங்குநாயகம் வந்தாலும் இதைத் தான் செய்யவேண்டும். அஃது அவ்விடத்திற்கு வருபவரின் கடமை! அது பொதுமக்கள் வரவேற்புக்குரியதோ இல்லையோ, அதுதான் செய்யத்தக்கது. 'செய்தக்க செய்யாமையானும் கெடும்' என்பது அரங்கநாயகம் பள்ளி ஆசிரியராக இருக்கும்பொழுதே படித்துக் கொடுத்ததுதானே!

இனி, இவ்வாறு கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்றுக்கு மாணவர்களிடம் வரவேற்பில்லையே ஏன்? அதற்குக் காரணம் இதுதான்: செய்யப்படவேண்டுவது எந்தவகைக் காரணத்தால் தகுதிபெற்ற ஒன்றாக இருந்தாலும், அதனால் பயனும் இருக்க வேண்டும் என்பது செயலுக்குரிய இலக்கணம்; மெய்ம்மம்! அஃதாவது 'தத்துவம்!' அஃதெப்படி என்றால், திருமணம் செய்து கொள்வது குடும்பநலன் கருதி, வழிமுறை விளைவு கருதி, வாழ்வியல் கோட்பாடு கருதி என்று எத்தனையோ காரணங்களுக்காக என்று கூறினாலும், அஃது ஆண் பெண் இருவரின் உடல் இன்பம் என்னும் பயனுக்குத்தான் என்பது அனைவர்க்கும் தெரியும்? அந்தப் பயன்கிடைக்க முடியாதபடி, மணந்துகொள்ளப்போகும் ஒரு பெண்,பெண்மையுணர்வே இல்லாதவளாகவும்,அல்லது ஆண், ஆண்மையுணர்வே அற்றவனாகவும் இருந்தால். அந்தத் திருமணத்தால் என்ன பயன்? அதற்கெப்படி வரவேற்பு இருக்கும்?

அதுபோல், தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்த மாணவர்களுக்குப் பயன் கிடைக்காமலிருந்து, ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்த மாணவர்களுக்குப் பயன் கிடைப்பதாக இருக்குமானால், தமிழ்ப்பயிற்று மொழிக்கு மாணவர்களிடம் எவ்வாறு வரவேற்பு இருக்கும்? இதை எடுத்துக்கூற அரங்கநாயகம் என்ன? அவர் காலிலுள்ள செருப்புக்கும் உயிரிருந்தால் கூறிவிடுமே! ஆனல், அக்கூற்று அறிவுடைமையாகுமா, என்றுதான் நாம் பார்க்க வேண்டும்.

எனவே, தமிழ்ப்பயிற்றுமொழிக்கு மாணவர்களிடமும் பொதுமக்களிடமும் வரவேற்பு குறைந்துள்ளது, என்பதற்கு அரசின் குறைபாடான, ஓரவஞ்சனையான நடைமுறையே காரணமன்றி, மாணவர்களோ, பொதுமக்களோ, அல்லது பயிற்சிமொழித்திட்டமோ குறைகூறத்தக்கவர்கள் அல்லர் என்பதை நாம் உணரவேண்டும். இந்த அரசு, ஏதோ தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்வதாக விளம்பரப்படுத்திக் கொள்வது, இத்தவகையில் ஒரு தப்பட்டமடிப்பே தவிர வேறன்று என்பதைத் தமிழ்மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை என்னும் ஒரு நடைமுறையை அரசு பின்பற்றினாலே போதும்; தமிழ்ப்பயிற்றுமொழிக்குப் பெரிய அளவில் வரவேற்பு கிடைத்துவிடும். அதைச் செய்ய

அரங்கநாயகத்துக்கோ அவரின் அரசுக்கோ துணிவு வரவேண்டும். அதற்கு உண்மையான தமிழ்ப்பற்று வேண்டும். தமிழ்மொழிக்கு உண்மையான, ஆக்கவழியிலான செயற்பாடுகளைத் தமிழகஅரசு செய்யத் தவறுமானால், அது பதவியிலிருப்பதே பெருத்த அவமானம் என்று அரசு கருதிக்கொள்ள வேண்டும்.

இனி, அடுத்தபடி, கல்வி அமைச்சர் அரங்கநாயகம் தமிழ் அகராதி பற்றி வெளிப்படுத்தியுள்ள இரண்டாவது கருத்தும் பெருத்த கண்டனத்துக்குரியது.

தமிழ் அகராதி என்பது, தமிழ்மொழிக்குரியதே அன்றி, அரங்கநாயகத்துக்கோ, அரசுக்கோ தனிவகையில் உரிமையுடையதோ, அவர்களுக்கு அரசியலால் பயன்தரத்தக்கதோ அன்று. ஒரு மொழி அகராதி என்பது அந்த மொழியில்தான் இருக்க முடியும்; இருக்க வேண்டும். வேற்றுமொழியில் வழங்கும் சொற்களையெல்லாம், அவை வழக்கில் உள்ளன என்பதற்காக ஒரு அகராதியில் தொகுத்து வைத்துக்கொண்டு, அஃது இந்தமொழி அகராதி என்று சொல்லிவிட முடியாது. தமிழ் மக்கள் வாயில் வழங்குகின்ற சொற்களெல்லாம் தமிழ் அகராதியில் புகுந்தால், அது மக்கள் வழக்கியல் அகராதியாக இருக்குமே தவிர, தமிழ் அகராதியாக இருக்க முடியாது; தமிழ் அகராதி என்பது தமிழ் மொழியைப் பொறுத்ததே தவிர, வேறு மொழிகளின் அகராதியாக எவ்வாறு இருக்க முடியும்? மேலும் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுக்கும் அகராதி என்றால், அதற்கு ஒரு தரமும், தகுதியும் இருக்க வேண்டாமா? பொதுமக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக, அவர்கள் வழங்கும் கொச்சை வடிவச் சொற்களையும், கலப்புச் சொற்களையும் அதில் கொண்டு வந்தால் அது தமிழ் அகராதி ஆகுமா? அரங்கநாயகத்திற்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் இஃதேன் விளங்கவில்லை.

எனவே, தமிழ்மொழி அகராதி என்றால், அது தூயதமிழ் அகராதியாகத்தான் இருக்க முடியும். அகராதி என்பதே நாம் பேசுகின்ற மொழி சரியானதுதானா, சரியான பொருளுடைய சொற்களைச் சரியான வடிவத்துடனும் ஒலிப்புடனுந்தாம் நாம் பேசுகின்றோமா என்பதை மக்கள் ஒப்பிட்டுப் பார்த்து, அவர்கள் பேசுகின்ற மொழியைச் செப்பப்படுத்திக் கொள்ள உதவுகின்ற, அவர்களுக்குத் துணையாக இருக்கின்ற ஒரு நூல். அஃது அம் மொழிக்கு ஓர் ஆசிரியனைப் போன்றது. ஆங்கில அகராதியில் உள்ள பலுக்கல் முறைகளைப் பார்த்தன்றோ, ஆங்கிலம் பேசுகின்றவர்கள் தாங்களும் சரியான ஆங்கிலத்தைப் பேசமுடிகிறது. பேசுகிறபடியே அகராதி இருந்தால், காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் மொழிவேறுபாடுகள் அதிகமாக ஆகிச் சொற்கள் சிதைவுற்றுப்போய், இறுதியில் அந்தச் சொற்களும் அவையுள்ள மொழியுமே அழிந்துவிடாவா? மொழிச்சிதைவு இலக்கியச் சிதைவையும், இலக்கியச் சிதைவு இலக்கணச் சிதைவையும், இலக்கணச் சிதைவு மொழியழிவையும், மொழியழிவு பண்பாட்டு வீழ்ச்சியையும், பண்பாட்டு வீழ்ச்சி இனத்தாழ்ச்சியையும் படிப்படியாக

ஏற்படுத்திவிடுமே! அப்படித்தானே தமிழ்மொழி தாழ்ந்து, தமிழினமும் வீழ்ந்துபோய் இன்று அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. இதை அரங்கநாயகமும் அவர் போன்றவர்களும் வேண்டுமானால் தம் அடிமைத்தனத்தால் அறியாமலும், அறிந்தாலும் உணராமலும், உணர்ந்தாலும் ஒப்புக்கொள்ளாமலும், ஒப்புக்கொண்டாலும் உரைக்கமுடியாமலும், உரைத்தாலும் செயல்பட முடியாமலும் இருக்கலாம். ஆனால், வருங்காலத் தமிழ் மக்களும் அப்படியிருக்க வேண்டுமா? அப்படியிருந்தால் அடிமைப்பட்ட தமிழும் தமிழினமும் மீளுமா? இதையேன் அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை?

'அகராதி என்பது பொதுவான (சாதாரண) மக்கள் படித்துப் பொருள் தெரிந்து கொள்வதற்காகத்தான் என்பதை இவர்கள் மறந்துவிடக் கூடாது' என்று அவர் அறிவுறுத்த விரும்புவது யாருக்கு? அகராதி என்பது ஒரு கதைப்பொத்தகமோ. இலக்கியமோ அன்று; அதில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பது, மொழியின் வழக்கையும், சொல்லின் உண்மையான வடிவத்தையும், அதன் உண்மையான பொருள்களையுந்தாமே அன்றி, தவறான மொழிவழக்கையும், தவறானவையும் கொச்சையானவையும், அயல்மொழிகளுக்குரியனவானவையும்-ஆன சொற்களையும், தவறான பலுக்கலையும் அல்ல, என்பதை முதலில் அரங்கநாயகம் போலும் மெனான் பள்ளி ஆசிரியர்களும், அவர் போலும் 'அகராதி'க்காரர்களும் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் அழிந்து விடுவோம்' மொழி இருக்கும். எனவே, மொழி நிலைப்பதற்குரிய முறையிலேயே மொழிவளர்ச்சி முறைகள் இருக்க வேண்டுமேயன்றி, அது சிதைவதற்குரிய முறையில் அது தொடர்பான முயற்சிகள் இருத்தல் கூடா. தூயதமிழ் அகராதி என்றாலே, பாவாணரையும் நம்மையும் நினைத்துக் கொண்டு, அவர் மேல் இருந்த வெறுப்பையும், நம் மேல் இருக்கின்ற வெறுப்பையும் வெளிப்படுத்தும் வகையில், தமிழ்மொழிக்கு ஏதமான, ஆக்கமும் பயனும் இல்லாத முயற்சிகளில் அரங்கநாயகம் போன்றவர்கள் ஈடுபட வேண்டாம் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

"தூயதமிழ் அகராதி 'தயாரிப்பது' (அவர் சொன்ன சொல்!) என்பது, இந்த 'ஜன்மத்தில்' (அவர் சொன்னசொல்!) முடியாதது" — என்று அவர் எரிச்சலுடன் பேசியிருப்பதாகத் தெரிகிறது. அவருக்கு ஏன் இத்தனை வேகம்; அகங்காரம்; தன்னம்பிக்கைக் குறைவு. தூயதமிழ் என்றால் படி என்ன விலை, அல்லது முழம் எத்தனைக் காசு, அல்லது குறுக்கம் (ஏகர்) எத்தனை ஆயிரம் என்று வாழ்வியல் தலைக் கணக்கிலேயே வாணாளைக்கழிக்கும் அரங்கநாயகம் போன்றவர்களால் இந்த 'ஜன்மத்தில்' (அவர் சொல்லையே பயன்படுத்துகிறேன்) மட்டுமன்று எந்த 'ஜன்மத்'திலும், எத்தனை 'ஜன்மம்' எடுத்தாலும், தூயதமிழ் அகராதியைச் செய்துவிட முடியாதுதான். (அந்த உண்மையை வெளிப்படுத்தியதற்காக நாம் அவரை இந்த வகையில் பாராட்டவும் செய்கிறோம்.) ஆனால், அவர் மட்டுமே தமிழுக்கு அதிகாரி அல்லர். தமிழ்மொழிக்கும்

தமிழ்நாட்டுக்கும் அரசர் அல்லர். அவரையறிந்துதான் தமிழ் வளர வேண்டுமென்பதுமில்லை. அவர் ஒரு தூசு! காலவெள்ளத்தில் அவர் ஒரு சிறிய நொடி! தமிழைப் பொறுத்த மட்டில் அவர் ஒரு வழக்கற்ற எழுத்து! (ஙி, ஙொ-போல). அதனால் அந்த அகராதி அவரால் செய்யடபட வேண்டும்; அல்லது அவர்தாம் செய்துதர வேண்டும் என்று இங்கு எவரும் அவரை வேண்டிக் கொள்ளவில்லை. ஆனால், அறிஞர்கள் செய்வதை 'அதிகார' அகங்காரத்தால் அவர் தடுக்க வேண்டாம் என்று அவருக்குத் தமிழன்போடு சொல்லிக் கொள்கிறோம். 'நந்தி' போல் இருந்து கொண்டு எதிர்காலத் தமிழாக்கத்துக்குரிய விளைவுகளை அவர் தடுக்க முயற்சி செய்ய வேண்டாம். அஃது அவராலும் முடியாது; அவருடைய ஆட்சித் தலைவர்களாலும் முடியாது.

இனி, இவர் போலும் கருத்துமுண்டமாக இருக்கும் சிலர்க்கு இன்னும் ஒரு விளக்கத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

'சாதாரண' மக்களுக்கு விளங்காது, 'பொதுமக்களுக்குப் புரியாது' என்று, தூயதமிழுக்கு இழுக்குச் சேர்க்க சில 'மேதா'விகள் முற்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அறிவிலும் வாழ்விலும் தூய்மையானவர்களாக இருக்கமுடியாது. தூய்மையே அவர்களுக்குப் பிடிக்காத சரக்காக இருக்கலாம். கீழ்மை உள்ளத்தவர்கள் தூய்மையை விரும்புவதில்லை. ஆனாலும் அவர்கள் ஏதோ ஒருவகையில் அவர்கள் கூறும் பொதுமக்களிடம் அறிமுகப்பட்டவர்களாகவும், சாய்கால் உள்ளவர்களாகவும் இருப்பதால், இந்த விளக்கத்தை அவர்களுக்குத் தரவேண்டி உள்ளது. அல்லது அவர்கள் இதற்கு விளக்கம் கூறவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

'சாதாரண' 'பொதுமக்கள்'—என்பவர்கள் யார்? படிக்காத மக்களா? அல்லது ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு படித்தவர்களா? அல்லது ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு படித்தவர்களா? அவர்களுக்கு என்ன அளவு? எந்த வகுப்பு—அல்லது கல்வி நிலை—வரை உள்ளவர்களைப் 'பொதுமக்கள்' அல்லது 'சாதாரண' மக்கள் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்? ஏனென்றால் நீங்கள் குறிப்பிடும் பொருளில் தெளிவில்லை.

பெரும்பாலும் படிக்காதவர்களை நீங்கள் அவ்வாறு குறிப்பிட மாட்டீர்கள் என்று கருதுகிறோம். ஏனென்றால் அவர்கள் இவற்றைப் படிக்கப் போவதில்லை. 'தினத்தந்தி' படிக்கின்ற, கல்வி நிலை குறைந்தவர்கள் என்றுமே அகராதியைத் தேடப்போவதில்லை. அல்லது தூயதமிழ்ச் சொல் புரியவில்லை—என்று கூற வேண்டிய தேவை அவர்களுக்கு வரப்போவதில்லை. ஓரளவு கற்றவர்கள் தாம் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ள, மொழியையும், அகராதிகளையும் பொருட்படுத்துவார்கள்; அல்லது நாடுவார்கள். அவர்களுடைய முன்னேற்றமும் தேவையில்லை என்று நீங்கள் கருதுகிறீர்களா? அல்லது அந்நிலை உங்களுக்கே புரியாதா? உங்களுக்குத்

தமிழறிவில்லை, அல்லது தமிழறிவு தேவையில்லை என்பதை இவ்வாறு ஏன் சுற்றி வளைத்துச் சொல்கிறீர்கள்?

நீங்கள் தமிழைப் பற்றிக் கவலைப்படாமற் போனால் வேறு யாருமே கவலைப்படக் கூடாதா? உங்கள் தமிழறிவில்லாத் தன்மையை அல்லது தமிழ்ப்பற்றில்லா நிலையை, ஏன் நயன்மைப் படுத்தப் பார்க்கின்றீர்கள்? உங்களால் அம் முயற்சி செய்யவியலாததாக இருக்குமானால், செய்கின்றவர்களை-அல்லது செய்யத் தகுதி உள்ளவர்களை ஏன தடுக்க வேண்டும்? அல்லது குறைத்து மதிப்பிட வேண்டும்? அல்லது அவர்களின் முயற்சியை ஏன் தடைப்படுத்த வேண்டும்? அல்லது உங்களிடம் பணமும் அதிகாரமும் உள்ளதென்று, அவற்றையே உங்களுக்குத் தகுதியாக்கிக் கொண்டு, தமிழுக்காகவும், தமிழின முன்னேற்றத்திற்காகவும் உண்மையான உழைப்பைக் கொடுக்க முன்வரும் அறிஞர்களை ஏன் நீங்கள் காலை வாரி விடுவதும், கழுத்தறுப்புச் செய்வதும், மூடிமறைப்பதுமான செயல்களை ஏன் செய்ய வேண்டும்?


நீங்கள் அவர்களுக்கு உதவமுன் வரவில்லை; உதவமாட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் செய்கின்ற செயலுக்கு ஏன் முட்டுக்கட்டை போடுகிறீர்கள்? தடைக் கல்லாக நிற்கிறீர்கள்? காலம் உங்கள் காட்டிலேயே மழை பொழியும்படி, உங்கள் காலடியிலேயே கிடந்துவிடும் என்ற நினைவோ? அல்லது இப்பொழுதுள்ள செல்வச் செழிப்பின் இறுமாப்போ? 'தமிழைப் பழித்தவனை என்தாய் தடுத்தாலும் விடேன்' என்ற பாவேந்தரின் சூளுரை உங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறோம்! எனவே, அரங்கநாயகம் போன்றவர்கள் தூயதமிழுக்கு இழுக்கு சேர்க்கக் கூடாது. அவ்வாறு அவர்கள் முயலுவார்களானால் அஃது அவர்களுக்கே இழுக்காக மட்டுமன்று, இழப்பாகவும் போய் விடும் என்று எச்சரிக்கின்றோம். தப்பித்தவறி முறைமாறி வீசிய அரசியல் கொடுங்காற்றால், கோபுரம் ஏறிய எச்சிலைகள், அடுத்து அடிக்கும் காற்றிற்கு அசையாமல் அங்கேயே நின்று விடும் என்று எதிர் பார்க்க வேண்டாம்! காலம் நல்ல தீர்ப்பை வழங்கும் என்று காத்திருக்கின்றது தமிழினம்! அதற்கு அது தமிழையேதான் நம்பி யிருக்க வேண்டும்! வெல்க தமிழ்! வீழ்க தமிழ்க் கெடுப்பான்கள்!

— பெருஞ்சித்திரனார்

---

## தமிழ்நிலம் - இதழெண் 45

தமிழ்நிலம்—இதழெண் 45-ஏரல், சொற்கைத் தமிழ்மன்றம் நடத்திய திருவள்ளுவர் சிலை சிறப்பு விழா மலராக வெளிவருகிறது! கட்டாயம் வாங்கிப் படியுங்கள்!



# நூறாசிரியம்

## பெருஞ்சித்திரன்

பாட்டு : கசு

எவர்கொல் அவர்க்கே முனிவாற் றும்மே!
அரைசாள் இழிசின் புரைசூழ் நெஞ்சினன்;
பறைவாய் தெறிக்கும் பத்த வச்சலன்
பெயரா விருக்கை நினைவிற் றப்பி
வடவர்ப் பணியும் முடவெள் ளறிவின்
இட்ட போக்கிற் கிடருக் காவலர்
சுட்டுக் கிடத்திய செந்தமிழ்ச் சிருஅன்
வளங்கூர் நாவின் இளங்கோ
மருந்தகத் துளைந்துயிர் துறப்பப் புடைந்து
கற்பத் தூக்கிய சுவடி வீசி
வெற்புத் தோளில் விறலேற்றித்
தெறுவிழியில் தீயேற்றிச்
செந்நாவிற் செற்றத்தார்
உண்ணுவி அறக்கழல
ஒருசூலிற் பன்னூருப்
புற்றீயற் புறப்பாட்டின்
கதிர்கொன்ற களமென்ன
எதிர்நின்ற மரம்வீழ்த்தி
ஓச்சுமுகத் தடக்கையின்
காச்சிதர்க்கும் களிறன்ன
மலையெரிவாய் பீர்ந்தன்ன
உலைநெஞ்சின் வெளியேறிப்
புதுப்புனலின் கதழ்போகிக்
கொதிப்புறு நறுநெய் யாக
விதிர்ப்புறப் படைப்புல மெதிர்ந்த ஞான்றே!

பொழிப்புரை :

எவர்தாம் அவர்களுக்கு எழுந்து நிற்கும் கடுஞ்சினத்தை ஆற்றக்கூடியவர்; அரசு ஆள்கின்ற இழிமையும் சிறுமையும் கொண்டு, தவறான நடவடிக்கைகளையே ஆராய்கின்ற உள்ளத்தின னும், பறைபோல் முழுங்குகின்ற கட்டளைகளைத் தெறிக்கின்ற வாயினனும் ஆகிய பக்தவச்சலன் என்னும் முதலமைச்சன், தன் பதவியழுத்தத்தினின்றும் பெயராமல் இருந்த இருக்கையின் நலத்தினால், தன் நினைவில் தவறியும், தனக்கு மேலராகிய வட நாட்டினர்க்குப் பணியும், கோணலான வெள்ளிய அறிவினோடும்,

தான் இடுக்கின்ற கட்டளைக்குச் சற்றும் இடராத போக்கினை உடைய காவலர்கள், துமுக்கியால் சுட்டுக்கிடத்திய செந்தமிழ் காக்கும் இளையோனாகிய, வளமையும் கூர்மையும் உடைய நாவினனாகிய இளங்கோ என்னும் மாணவன், மருத்துவமனையின்கண் துன்புற்று உயிர் துறந்தானாக; அதனால் அளாவியெழுந்த மாணவர்கள், தாங்கள் கற்பதற்காகக் கொண்டு சென்ற நூல்சுவடிகளை ஒருபுறத்தே வீசியெறிந்து விட்டுத், தங்களுடைய மலை போலும் தோள்களில் வீரத்தை ஏற்றிக்கொண்டு, கனல்கின்ற விழியில் தீயினை ஏற்றிக்கொண்டு, கலவி பயிலும் செவ்விய நாவில் சினத்தை உடையவராக, உள்ளுயிர் அறவே கழன்று வெளியே கழியுமாறு, ஒரு கருப்பப் பேற்றில் பல நூறு ஈசல்கள் புறப்பட்டு வெளியேறுதல் போல், கதிர்களைப் பிடுங்கி யெறிகின்ற நெற்களம் போலும், எதிரே நிற்கின்ற மரங்களையெல்லாம் வீழ்த்தி, ஓச்சியவாறு, முகம் படுத்திய பருத்த கைகளை நீட்டிக்கொண்டு, காட்டை அழிக்கின்ற களிறுகள் போல், எரிமலையின் வாயினின்று சிதறியடிக்கின்ற உலைபோன்ற நெஞ்சுகளை உடையவராகி, (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்றும்) வெளியேறிப் புதுவெள்ளத்தின் பொங்குகின்ற சினத்தவராகிய போக்குடையவராகிக் கொதிக்கின்ற நல்ல நெய்போல், பிறர் நடுக்கமுற, அக் காவலர் படைகளை எதிர்த்துப் போரிட்ட பொழுதில்!

விரிப்பு : இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

அண்ணாமலை நகரத்துத் தமிழ்காக்கத் துஞ்சிய அரசேந்திரனொடு, குண்டடிபட்டு மருந்தகத்து உயிர் துறந்த இலங்கோவனைப் பாடியது.

'கொதிப்புறு நறுநெய்யாக, விதிர்ப்புறப் படைப்புலம் எதிர்ந்த ஞான்றே, எவர்கொல் அவர்க்கே முனிவாற்றும்மே' — என இறுவாய்த் தொடையாக வைத்துப் பொருள் கொள்க.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவன் அரசேந்திரன் காவலர்களின் குண்டடிபட்டு, அவ் விடத்திலேயே மாய்ந்தான். அவன் நண்பனாகிய இளங்கோவனே துமுக்கிச் சூடுபட்டு, மருத்துவமனையில் துன்புறக் கிடந்து இறந்துபோனான். அவன் இறந்துபோன செய்தியைக் கேள்வியுற்ற மாணவர்கள் கொதிப்புடன் வீறுகொண்டெழுந்து, காவலர் படையுடன் போரிட எதிர்ந்த காட்சியைக் கூறுவதாகும் இப் பாடல்.

காலமும் சூழலும் முன்னைய பாடல்களுள் காட்டப் பெற்றன.

எவர்கொல் அவர்க்கே முனிவு ஆற்றும்மே : எவர்தாம் அவர்க்கெழுந்த சீற்றத்தை ஆற்றக் கூடியவரோ! எவரும் இல்லை என்பதாகப் பொருள் கொள்க.

அரைசு ஆள்.........நெஞ்சினன் : அரசு ஆளுகின்ற இழிமையும் சிறுமையும் கொண்டு, தவறான நடவடிக்கைகளையே ஆராய்கின்ற உளத்தினன்—பக்தவச்சலன் என்னும் முதலமைச்சன்.

பறைவாய் தெறிக்கும் : பறைபோலும் முழங்குகின்ற அடக்கமிலாத வாய்.

பெயரா விருக்கை நினைவில் தப்பி : தன் பதவியழுத்தத்தின் ஆசையால் அதனின்று அசையாமல் குந்தியிருந்த இருக்கையின் நலத்தினுல், தன் நினைவில் தவறியும்.

வடவர்ப் பணியும் முடவெள்ளறிவின் : தனக்கு ஆட்சி நிலையில் மேலராகிய வடநாட்டு நடுவணரசினர்க்குப் பணிந்து போகின்ற கோணலான வெள்ளிய புல்லறிவினேடு.

இட்ட பேரக்கிற்கு இடராக் காவலர் : அவன் இடுகின்ற கட்டளைகளுக்குச் சற்றும் மாறுக நடவாத காவல்படையினர்.

சுட்டுக் கிடத்திய : துமுக்கியால் சுட்டுக் கிடத்திய.

செந்தமிழ்ச் சிருஅன் : செந்தமிழ்காக்கும் இளையோனுகிய.

வளங்கூர் நாவின் இளங்கோ : வளமையும் கூர்மையும் உடைய நாவினனை இளங்கோவன் என்னும் மாணவன்.

மருந்தகத்து உளைந்து உயிர்துறப்ப : மருத்துவ மனையின்கண் துன்புறக்கிடந்து உயிர் துறந்ததனுல்.

புடைந்து : அளாவியெழுந்த மாணவர்கள்.

கற்பத் தூக்கிய சுவடி வீசி : தாங்கள் கற்பதற்காகத் தூக்கிக் கொண்டு சென்ற நூற்சுவடிகளை ஒருபுறத்தே வீசியெறிந்துவிட்டு.

வெற்புத் தோளில் விறலேற்றி : தங்களின் மலைபோலும் தோள்களில் வீரத்தை வருவித்துக் கொண்டு.

தெறுவிழியில் தீயேற்றி : கனல்கின்ற விழியில் தீயினை ஏற்றிக் கொண்டு.

செந்நாவில் செற்றத்தார் : தங்களுடைய கல்வியிலும் செவ்விய நாவில் சினத்தை உடையவராக.

செவ்விய நாவில் சினத்தை உடையவராக என்றது, கொதிக்கின்ற கடுமையான உரைகளை முழக்குகின்ற தன்மையராக என்றற்கு.

உண்ணுவி அறக்கழல : உள் உள்ள உயிர் அறவே கழன்று வெளியேறும்படி. உயிர் போகின்றவாறு முழங்கிச் சென்றூர்கள் என்றவாறு.

ஒருசூலிற் பல்நூருய்ப் புற்றீயல் புறப்பாட்டின் : ஒருமுறை சூலுற்று வெளிப்போந்த பல்நூறு ஈசல்கள் புறப்பட்டு வெளியேறுதல் போல்.

கதிர்கொன்ற களமென்ன : கதிர்களைப் பிடுங்கி எறிகின்ற நெற்களம் போல்.

எதிர் நின்ற மரம் வீழ்த்தி : எதிரதாகத் தென்பட்டு நிற்கின்ற மரங்களையெல்லாம் வீழ்த்தியவாறு.

ஒச்சு முகத் தடக்கையின் : ஓச்சியவாறு முகத்தின்மேல் வைத்த பருத்த தும்பிக்கைகளை நீட்டிக் கொண்டு.

காச்சிதர்க்கும் களிறன்ன : காட்டை அழிக்கின்ற ஆண்யானை களைப் போல்.

மலையெரி வாய் பீர்ந்து அன்ன : எரிமலையின் வாயினின்று பீச்சியடித்துச் சிதறுதல் போன்ற.

உலை நெஞ்சின் : கனற்குழும்பின் நெஞ்சுகளை உடையவர்களாகி

வெளியேறி : (அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கட்டிடத் தினின்றும்) வெளியே போந்து.

புதுப்புனலின் கனல் போகி : புது வெள்ளத்தின் பொங்குகின்ற சினத்தவராகிய போக்குடையவராகி.

கொதிப்புறு நறுநெய் யாக : கொதிக்கின்ற நல்ல நெய்யைப் போல்.

விதிர்ப்புற : பார்க்கின்ற பிறர் நடுக்கமுற.

படைப்புலம் எதிர்த்த ஞான்றே! : அக் காவலர் படைகளை எதிர்த்துப் போரிட்ட பொழுதில்.

இந்நியெதிர்ப்புப் போரில் இளங்கோவன் காவலரின் குண்டடி பட்டு, மருத்துவமனையில் உயிர்துறந்தான் என்று கேள்வியுற்ற அளவில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துப் பயின்ற அவனின் ஒருசாலை மாணவர்கள், கிளர்த்தெழுந்து, கொதிப்புற்று, அக் காவலர் படையை எதிர்ந்து போய்ப் போராட்டம் நடத்தியதன் சூழலை விளக்குவதாகும் இப் பாடல்.

இப் பாடல் முன்னது திணையும் பயில்வோர் எழுச்சி என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன. 0

---


# "தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

| | உள் நாடு | | கொழும்பு | | வெளி நாடு | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 15 | உருபா | 35 | உருபா | 45 | உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 | ,, | 18 | ,, | 25 | ,, |
| தனியிதழ் : | 1·25 | ,, | 3 | ,, | 4 | ,, |

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க!

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனுர்.

அறுவைமுறை மூலம் இளமை பெறலில் நாள முடிப்பு முறையும் ஒன்ருகும். இசுடீனாக் யூகன் (1861-1944) என்ற மருத்துவர் ஆசுட்ரிய நாட்டின் வியன்ன நகரில் வாழ்ந்து வந்தார். அவர் ஓர் எலியின் பால் சுரப்பிகளை வெட்டி, மற்ருெரு எலியின் பால் சுரப்பிகளுக்குப் பகரமாகப் பொருத்தி, விரிவான ஆராய்ச்சி நடத்தி ஒரு முடிவுக்கு வந்தார். ஒட்டுமுறையில் எவ்வளவு நன்மை கிடைக்குமோ அவ்வளவு நன்மை அல்லது அதற்கும் கூடுதலான நன்மை நாள முடிப்பு முறையால் கிடைக்கிறது என்று வெளியிட்டார். நாள முடிப்புமுறை இசுடீனாக் அறுவைமுறை எனவும் பெயர் பெறும்.

இவ் வறுவை முறையின் அடிப்படை மிக எளிது. சூற்பை, வித்து போன்றவை, இரண்டு வகைச் சுரப்பிகளால் ஆனவை. வித்தின் ஒரு பகுதி இனப் பெருக்கத்திற்குரிய கரு உயிர்களைக் கொண்ட விந்துவைச் சுரக்கின்றது. மற்ருெரு பகுதியான இடைக் கண்ணறைகள் (செல்கள்) பால் கார்மோனைச் சுரக்கின்றன. இந்த கார்மோன் உடலின் முறுக்கையும் பால் வினைகளையும் அடக்கி ஆள்கின்றது. வித்துகளிலிருந்து விந்துவை எடுத்துச் செல்லும் விந்துக்குழாய்கள் வெட்டப்பட்டு, தனித்தனியே முடியப்பட்டால், வித்துகளிலிருந்து விந்து வெளியேற இயலாது. விந்து வித்துகளிலேயே தங்க நேருகிறது. நாளடைவில் விந்துவைச் சுரக்கும் கண்ணறைகள் (செல்கள்) வேலை இல்லாததால் சுருங்கி விடுகின்றன. இந்த இழப்பைச் சரிக்கட்ட மற்ருெரு பகுதியான இடைக் கண்ணறைகள் (செல்கள்) மிக்க சுறு சுறுப்புடன் இயங்குகின்றன. சில வேளைகளில் பெரிதாகி விடுகின்றன. அதனுல் மிகுதியான கார்மோன் உண்டாகிறது. இந்த மிகுதியான கார்மோன் உடலின் முறுக்கை ஏற்றி, தளர்ந்திருந்த உறுப்புகளை எல்லாம் எழுச்சி பெறச் செய்து வன்மையுடன் இருக்கச் செய்கின்றது. இத்தன்மையைத்தான் இசுடீனாக் தம் அறுவைமுறையில் பயன்படுத்திக் கொண்டார். மூப்பான மாந்தனின் ஒருபக்கத்து விந்துக்குழாயையோ அல்லது இரண்டு பக்கத்து விந்துக்குழாய்களையுமோ வெட்டி முடிந்துவிட்டால் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே நல்ல பயன் தென்படுகிறது. உடல் வேலைகளிலும், பால் ஆற்றலிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இந்த நன்மை இசுடீனாக் நினைத்தது போன்று வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்பதில்லை. ஆனல் ஒன்றுமட்டும் உறுதியாகச் சொல்லலாம். ஒட்டு முறையை விட இது சிறந்தது என்பதில் ஐயமில்லை. ஒட்டுமுறையைவிட, நாளமுடிப்புமுறை மிக எளிது. அறுக்க வேண்டிய இடத்தை

மட்டும் மரத்துப் போகச் செய்து, சிறியகீறல் கீறி, இம் முறையை விரைவாகவும், எளிதாகவும் செய்து முடித்து விடலாம்.

இந்த முடிப்புமுறை ஆண்மையை உண்டாக்குகிறது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் அந்த ஆணை மலடனாக்குகிறது என்பதை மறந்து விடக்கூடாது. அந்த ஆணுக்குரிய இனப் பெருக்கம் செய்யும் ஆற்றல் அழிக்கப்படுகிறது. மூப்படைந்தவர்கள் மலடர்கள் ஆவதால் கவலை இல்லைதான். ஆனால் இளைஞர்கள் மலடர் கள் ஆகி விட்டால் கவலைப்படாமல் இருக்க முடியாதே. ஆகவே இளைஞர்களுக்கு ஒருபக்கத்து விந்துக்குழாய் மட்டும் வெட்டப்பட்டு முடியப்படுகிறது. ஒருவித்திலிருந்து மிகுந்த கார்மோன் சுரக்கப் பட்டு, வேண்டிய ஆண்மையைக் கொடுக்கின்றது. மற்றொரு வித்திலிருந்து விந்துசுரக்கப்பட்டு, விந்துக் குழாய்மூலம் வெளி யேறுகிறது. இவ்வாறாக அந்த இளைஞனின் கருவுறச்செய்யும்தன் மையும் காக்கப்படுகின்றது. ஆண்மையும் கூடுதலாகின்றது.

அலித்தன்மையைப் போக்க வரோனுப்முறை சிறந்ததா, இசு மநாக்முறை சிறந்ததா என்று ஆராய்வதைவிட, ஒருநல்லமருத் துவரின் உதவியைநாடுவதுதான் மிகச் சிறந்தது. இசமநாக்முறை யை விட வரோனுப்முறை இக்கட்டானது. அறுவை மருத்துவருக்கு மிக்கத் திறமை வேண்டும். அலித்தன்மை கார்மோன் குறைவால் ஏற்பட்டிருப்பின் முதலில் காரமோன் மருத்துவம்தான் செய்ய வேண்டும். கார்மோன் மருத்துவத்தால் பயன் இல்லை என்று தெள்ளத் தெளிய தெரிந்த பின்தான், ஒருபக்க அல்லது இருபக்க முடிப்புமுறைக்குப் போக வேண்டும். இதிலும் நலம் காணவில்லை என்றால்தான் முடிவாக வரோனுப்முறையை அணுக வேண்டும்.

ஆண் குறியின் பூவை மூடியுள்ள முன்தோல், நீண்டும். பூவுடன் ஒட்டிக்கொண்டும் இருக்கலாம். ஆண்குறியின் பூவின்மேல் புதிதாக எதேனும் முளைக்கலாம். சிறுநீர்ப் புறவழியில சுருக்கம் ஏற்படலாம். சிறுநீர் புறவழியின் துளை மிகச் சிறிதாக இருக்கலாம். வித்துகளைத் தாங்கி உள்ள தோற் பையில் புற்றுநோய் உண்டாக லாம். மேலே குறிப்பிட்ட காரணங்களால் அலிததன்மை உண்டாக லாம். இந்த அலித்தன்மையை நீக்க அறுவைமுறை வெகுவாகப் பயன்படுகிறது.

## மூப்பால் ஆண்களுக்குஏற்படும் மாற்றங்கள் :

மூப்பின் மிகுதியால் மாந்தனுக்கு உடனேயோ அல்லது கொஞ்ச காலம் சென்றோ மாற்ற முடியாத அலித்தன்மை உண்டா கிறது. சிறுவனாய் இருக்கும் பொழுது, ஆணுக்குப் பால் உணர்ச்சி இருப்பதில்லை. பால் உணர்ச்சி இல்லாத சிறுவன் வளர்ந்து பால் உணர்ச்சி உள்ள இளைஞனாக ஆகிறான். அவன் உடலின் உள்ளே உள்ள சில சுரப்பிகள் வளர்ந்து முதிர்ச்சியடைந்து அவனுக்கு

ஆண்மையை உண்டாக்கிக் காளைத் தன்மையைக் கொடுப்பதுதான் இம்மாற்றம் ஏற்படக்காரணம். அகவை ஆக ஆக இச் சுரப்பிகள் சுருங்கி நசித்துப் போகின்றன. ஆகவே பால் உணர்ச்சியும் வர வரக் குறைந்து பால் உணர்ச்சி அற்ற மூப்பு வந்தடைகிறது.

பெண்கள் ஒருகுறிப்பிட்டகாலம் வரைதான் கருவுறமுடியும்' அந்தக்கால வரைக்குப் பின் அவர்களால் இனப் பெருக்கம் செய்ய இயலாது. அதே போன்று ஆண்களுக்கும் வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டாகிறது. அந்தக் காலததிற்குப் பின் அவர்களுக்கு இனப் பெருக்கம் செய்யும் ஆற்றல் அழிந்து விடுகிறது. பெண்களுக்குத் தோன்றுவது போல் இம்மாற்றம் ஆண்களுக்கு வெளிப்படையாகத் தோன்றுவதில்லை. ஏன் எனில் பெண்களுக்கு மாதப் போக்கு வருவது நின்று போவதைச் சுட்டிக் காட்டுவது போன்று, ஆண்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்டி, இதனுல் இனப் பெருக்கம் செய்யும் ஆற்றல் அழிந்து விட்டது எனச் சொல்ல இயலுவதில்லை. அத்துடன் இம்மாற்றம் மிகமிக மெல்லமெல்ல ஏறபடுகிறது. பெண்ணுக்கு நாற்பத்தைந்து அல்லது ஐம்பதாம் ஆண்டில் இனப் பெருக்கம் செய்ய இடலாது. அஃதாவது மாதப்போக்கு வருவது நின்று விடுகிறது என்றால், ஆணுக்கு ஐம்பத்தைந்து அல்லது அறுபதாம் ஆண்டில் இனப்பெருக்கம் செய்யும் ஆற்றல் அழிகிறது எனக் கொள்ளலாம். இதுவும் அவர் அறியாதே வந்தடைகிறது. முன்போன்று அவருக்குக் கலவி விருப்பம் அவ்வளவாக ஏற்படுவதில்லை. புணர்ச்சியின் போது வெளியேறும் விந்துவின் அளவு மிகக் கொஞ்சமே. கலவிக் கிளர்ச்சி முன் போன்று கிளர்ந்து எழுவதில்லை. ஆனல் அவை, களைப்பால், வாணிகத் தொல்லைகளால் அல்லது இவைபோன்றவையால் உண்டாகியவை என ஒருவர் எண்ணுகின்றார். நாள் செல்லச் செல்ல முடிவில் புணர்ச்சியின் போது விந்து வெளியேறுத நிலை ஒன்று ஏற்படுகிறது. அல்லது ஆண்குறி எழுச்சி இன்றி விரைவு விந்துவீழ்கை ஏற்படுகிறது. அல்லது அவரால் புணர்ச்சியே செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்பொழுதுதான் உண்மையாகவே அவர் உணர்கின்றார், மூப்பு முற்றுப் பெற்றது என்று. இந்நிலை பொதுவாக மாந்தர்களுக்கு எந்த அகவையில் உண்டாகிறது எனக்கூற இயலாது. ஏன்எனில் இந்த அகவை மாந்தருக்கு மாந்தர் மாறுபாடு உடையது. சிலருக்கு அகவையால் ஏற்படும மாற்றங்கள் ஐம்பதாவது அகவையிலேயே நன்ருகத் தோன்றுகின்றன. சிலருக்கு அறுபத்தைந்து அகவை ஆகவேண்டும். மற்றும் சிலருக்கோ எழுபதில் கூட மாற்றத்திற்கான அறிகுறியே தோன்றுவதில்லை. ஐம்பதே ஆகட்டும் அல்லது நூறு அகவையே ஆகட்டும், முன்பின்னுக மூப்பால் ஏற்படும் அலித்தன்மை ஒவ்வொருவருக்கும் வந்தே தீரும். இந்த மூப்பிலும், புணர்ச்சி செய்ய விழைந்து இருக்கும் கொஞ்ச ஆற்றலையும் இழந்து விடக் கூடாதே என்ற அருள் நோக்கில் இந்த அலித்தன்மையை


கிழவர்களுக்கு, அருள் பாவித்தனரோ இயற்கை அன்னை என எண்ணவேண்டி இருக்கின்றது.

மூப்பினால் உண்டாகும் அலித்தன்மையைப் போக்க இயலுமா என்றால் மிகமிகக் கடினம் என்று தான் சொல்லமுடியும். ஆனால் சிலருக்கு, உரிய அகவை வருவதற்கு முன்பே மூப்பு ஏற்படலாம். அவ் வகையான மூப்பு ஏற்படாதபடி காத்துக் கொள்ளலாம். விரைவில் மூப்பு அணுகாதபடியும் பார்த்துக் கொள்ளலாம். இளமையில் வந்த மூப்பை மாற்றலாம். இப்பொழுதுள்ள ஆண்கள் பிஞ்சில் பழுத்தவர்கள் ஆக ஆகிவிடுகிறார்கள். அவர்களுடைய பாலியல் வாழ்க்கை எவ்வளவு அகவை வரை இருக்க வேண்டுமோ அதற்குக் குறைந்த அகவையிலேயே முடிவடைகிறது. ஆகவே மூப்பினால் ஏற்படும் அலித்தன்மையைப் போக்க முடிவது என்பது உண்மையில் மூப்பை எப்படி முறியடிப்பது என்பதேயாகும்.

தூம்பற்ற உள்சுரப்பிகளின் அமைப்பிலும், சுரப்பிகளிலும் ஏற்படும் மாற்றங்களால் தான் மூப்பு உண்டாகிறது. மூப்பினால் தைராயிடு சுரப்பிப் பழுதாகிறது என்பதை முன்பே அறிந்திருந்தனர். இப்பொழுது மூப்பினால் தைராயிடு மட்டுமன்று இன்னும் பல தூம்பற்ற உள் சுரப்பிகள் பழுதடைகின்றன என்பதை நாம் அறிவோம். வித்துகள் (பெண்களுக்கு சூற்பைகள்) அட்ரினல்கள், கணயம், ஆகியவை அவற்றில் முதன்மையானவை) விலங்குகளில் இவ்வுறுப்புகளை நீக்கி விட்டால், அவற்றிற்கு மூப்பின் அடையாளங்கள் வந்தடைகின்றன. கல்லீரலிலும், சிறுநீர்ப் பிரித்தியிலும் மூப்பினால் மாற்றங்கள் உண்டாகின்றன. ஏனெனில் அவற்றிலிருந்தும் உள்நீர்கள் சுரந்து வெளியாகின்றன. ஆகவே மூப்பு தூம்பற்ற சுரப்பிகள் பழுதடைவதால் உண்டாகிறது எனக்கொள்ளலாம். மூப்பின் காரணமாக ஒருவகையான மயக்க நிலை உண்டாகிறது. மூப்பினால் குருதிக்குழாய்கள் சுருங்குகின்றன. அவற்றில் வேண்டிய அளவு குருதி பாய்வதில்லை. நரம்புகள் தளர்ச்சி அடைகின்றன. ஆகவே நரம்புகளால் உண்டான கட்டுப்பாடு இல்லாமல் போகின்றது. வேண்டிய அளவிற்குக் குறைவாகக்குருதி வந்தடைவதாலும் நரம்புகளால் உண்டான கட்டுப்பாடு இல்லாமல் போவதாலும், உயிர் அணுத்தொகுப்புகளும், உறுப்புகளும் நசித்துப் போகின்றன. இவ்வாறு உடலின் உள்ளே நசித்துப் போகும் தன்மையையே மூப்பாக நாம் வெளியில் காண்கின்றோம். தூம்பற்ற சுரப்பிகள், உறுப்புகள், உயிர் அணுத்தொகுப்புகள் ஆகியவை ஒரே நேரத்தில் நசித்துப்போகா. உயிர் அணுத்தொகுப்புகள், தூம்பற்ற சுரப்பிகளின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியவை. இச் சுரப்பிகள் உயிர் அணுதொகுப்புகளின் வளர் சிதைமாற்றத்தையும் ஊட்டத்தையும் மேற்பார்க்கின்றன. இச் சுரப்பிகள், தங்களின் நஞ்சு முறிக்கும் தன்மையால், உறுப்புகளுக்கும், உயிர் அணுத்தொகுப்பு

# ஈப்போ, பாவாணர் தமிழ்மன்றத் தலைவர் திரு. சா.சி. சுப்பையா தமிழகம் வருகை!

அண்மையில் மலேசியாவில் உள்ள ஈப்போ, பாவாணர் தமிழ்மன்ற அமைப்பாளரும், முன்னாள் தலைவரும், அடிநாள் தொட்ட தென்மொழி அன்பரும், புரப்பாளரும், பரப்பாளரும், நம் ஆசிரியர் பாவலரேறு அவர்கள் 1974-ஆம் ஆண்டு மலேசியா சென்றிருந்த பொழுது, அவரை ஈப்போ நகரில் வரவேற்றுப் பேணிப் புரந்து சிறப்புச் செய்த பெருந்தகையாளரும் ஆகிய, பாவலர் திரு. சா. சி. சுப்பையா அவர்கள், முப்பத்தைந்தாண்டுகளுக்குப்பின், முகவை மாவட்டத்தில் உள்ள அவரின் சொந்த ஊருக்கு வந்திருந்தார்கள்.



அவர், சென்னைக்கு வந்து ஊர் செல்லும் முன்னும், ஊரினின்று திரும்பி சென்னை வந்து வானூர்தி வழியாகக் கடந்த 27—7—84-இல் மலேசியா திரும்பும் பொழுதும், தென்மொழி அலுவலகத்திற்கும், உ.த.மு.க. அலுவலகத்திற்கும், ஆசிரியரின் இல்லத்திற்கும் வந்திருந்து பாவலரேறு அவர்களிடம் உரையாடி மகிழ்ந்திருந்து சென்றார்கள்.

ஏறத்தாழ 10 ஆண்டுகள் கழித்து இரு பெரும் நல்லுணர்வாளர்களும், ஒருவரையொருவர் உள்ளுணர்வுடனும் பேரன்புடனும் கண்டு மகிழ்ந்து, பேசி உவந்த காட்சி காணுதற்கு அரியதாகும். பாவலரேறு அவர்கள், திரு. சுப்பையா அவர்களை நீண்ட நாள்கள் தம் இல்லத்திலேயே தங்கியிருக்கக் கேட்டும், அவர்கள் ஊர் சென்று சிலநாட்கள் அங்குத் தங்கியிருக்க வேண்டிய இன்றியமையாலும், பின்னர் சென்னை வந்து உடனே திரும்ப வேண்டிய கடப்பாட்டாலும், சென்னைத் தங்கல் இயலாமற் போய்விட்டது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் வந்தடையும் நஞ்சுகளை முறித்து, அவற்றை இடைவிடாது காக்கின்றன. இந்த நஞ்சு உணவு, காற்று போன்றவற்றின் மூலமாக வெளியிலிருந்தும் வரலாம். சுரப்பிகள் நசித்தபின், உயிர் அணுத்தொகுப்புகளில் வளர்சிதைமாற்றம் குறைகிறது. நுண் அமைப்புகளுக்குப் பகரமாக வெறும் தசைநார்கள் பெருகுகின்றன. சில பழக்க வழக்கங்கள், மிகுந்த பளுவான வேலைகள், இச்சுரப்பிகளைத் தாக்கிக் கேடு உண்டாக்கலாம். அதனாலும் மூப்பு விரைவில் வந்தடையலாம்.

— (தொடரும்)

மேலும், திரு சுப்பையா அவர்களுக்கு விரிவான முறையில் சிறப்பான ஒரு பாராட்டும், வழியனுப்பும் ஐயா அவர்கள் செய்ய விரும்பியும், தமிழீழப் போராளிகளின் துயரநாள் கடைப்பிடிப் பாலும், காலம் ஒத்துவராமையாலும் அதுவும் முழு அளவில் நிறைவேறாமல் போய்விட்டது.

ஆனாலும், ஒரு சிறு அளவிலேனும் அவருக்குப் பாராட்டுச் செய்ய விரும்பிய பாவலரேறு ஐயா அவர்கள், தமிழீழப் போராளி களின் துயர நினைவுநாளான, கடந்த 25-7-84 அன்று, பிற்பகல் 5 மணி அளவில், நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழக அலுவலகத்திலேயே, நம் கழக அன்பர்களும் குடும்பத்தினரும் பலர் நிறைந்திருக்க, பாவலர் திரு. சுப்பையா அவர்களுக்கு, ஒரு பாராட்டு விழாவும், வழியனுப்பு விழாவும் நடத்திச் சிறப்புச் செய்து, அனைவரையும் மகிழச் செய்தார்கள்.

அன்று நடைபெற்ற கூட்டத்தில், தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் தென்மொழி ப. முருகவேள் வரவேற்புரையாற்றி னார். பாவலரேறு ஐயா அவர்கள் தலைமையேற்று, திரு சுப்பையா அவர்கள் தூய தமிழ்த் தொண்டு பற்றியும், தென்மொழியை ஆயிரம் படிகளுக்கு மேல் விற்று மலேசியா முழுவதும் பரப்பிய அவரின் அருளாண்மையும் திறலாண்மையும் பற்றியும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களுக்கு மிக விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறினார்கள்.

அதற்கு ஏற்புரையாக திரு. சுப்பையா அவர்கள் மலேசியாவில் வாழ்கின்ற தமிழர்கள் பற்றியும், தம் தூய தமிழ்த் தொண்டு பற்றியும், பாவாணர் மேலும் தென்மொழியின் பாலும் தாம் கொண்டிருந்த ஈடுபாடுகள் பற்றியும் மகிழ்வோடும் பெருமிதத் தோடும் குழுமியிருந்த அன்பர்களுக்கு நகைச் சுவையோடும் விளங்கக் கூறினார்கள்.

இடையில், பாவலரேறு ஐயா அவர்கள் ஈப்போ பாவலர் திரு. சா. சி. சுப்பையா அவர்களுக்குத் தம் அன்பின் அடையாள மாகக் கழகச்சார்பில் கைத்தறியாடை ஒன்றைப் போர்த்தி வாழ்த்தினார்கள். பின்னர் கழகச் சார்பாக ஈப்போ பாவலர்க்குத் தேநீர் விருந்தொன்று சிறு அளவில் நடைபெற்றது.

இறுதியில் பாவலர் திரு. சா. சி. அவர்கள் அனைவரிடமும் அன்புடனும் கனிவுடனும் விடை பெற்றுச் சென்றார்கள்.

திரு. சா. சி. அவர்கள் நம் தென்மொழி இல்லம் வந்திருந்த பொழுது அவரை நேருரை கண்டு சில கேள்விகள் கேட்க, அவற்றிற்கு அவர் அளித்த விடைகள் தமிழ்நிலம் இதழ் 43-இல் வெளியாகியுள்ளன. அவர்களின் தமிழக வரவின் நினைவாக இந் நேருரையும் அவரின் வழியனுப்பு விழாச் சிறப்பும் என்றென்றும் நம் நெஞ்சில் நிலைத்து நிற்குமாக! 0

# உடலிலே தோன்றி உடலையே மாய்க்கும் நோயணுக்கள்!

— புலவர் அறிவுடைநம்பி.

பல ஆண்டுகளாகவே, ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற சொல் அரசியலாரிடம் அதிகம் அடிக்கடி பேசப்படுவதைக் காண்கிறோம். பேச்சு அவ்வாறு இருந்தாலும் செயல் எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்தால் துயரந்தான் மிஞ்சும். தமிழில் படித்துப்பட்டம் பெற்றவர்களுக்குத்தாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தப்பித்தவறி நடவடிக்கை எடுத்தால், உடனே இத்தமிழ் நாட்டில் வாழக்கூடிய கும்பலே அதைத் தடுக்க வழக்கு மன்றம் போகிறது. அதைவிட இன்னும் துயரம் தரக்கூடிய செய்தி நமது கல்வித்துறை. மொழித்துறையில் சிறிதளவேனும் முன்னேற்றம் காணப்பட வேண்டுமானால், நமது கல்வித்துறை சீர்ப்பட்டாக வேண்டும். மொழிஉணர்வு, இனவுணர்வுடையவர்களே ஆசிரியர்களாக அமர்த்தப்பட வேண்டும். இன்னும் கொடுமையின் முடியாக விளங்குவது தாய் மொழியாகிய தமிழை, முதன் மொழியாகப் படித்தவர்கள், கல்வித்துறையில் கூட எந்த ஒரு தலைமைப் பொறுப்பிற்கும் வரக்கூடாது. அவர்கள் தமிழைப் படித்த காரணியத்தால் புதிய ஓர் ஒடுக்கப்பட்ட இனமாகி வருகின்றனர். இப்படி முனைபவர்கள் வேற்று மொழியினர் அல்லர்; அவரும் தமிழரே. ஒரு தாய் மொழிக்கு, அம்மொழியைத் தாய்மொழியாக உடையவரே பகைவராய் இருப்பது உலகிலேயே தமிழனுக்குத்தான் இருக்கும். இதைத்தான் சென்னை உயர்நெறி மன்ற நடுவர் ஒருவர் அண்மைக்காலத்தில் ஒரு கல்லூரி விழாவில் பேசும் பொழுது, ''உலகிலேயே இல்லாத ஒருபுதுமை என்ன வென்றால், தமிழ் நாட்டில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தங்களை ஏதோ ஒரு தனி இனமாக எண்ணிக் கொள்ளும் செயல்'' எனக்குறிப்பிட்டார்.

அரசு, அரசு அலுவலர்கள் தமிழில்தான் கையெழுத்திட வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது. ஆனால் அஃது எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பதை ஆய்வு நடத்தியதா? அரசிடமிருந்து வரும் பொதுவான ஒரு கட்டளை கூட ஆங்கிலத்தில் தான் வருகிறது. இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணியம் அரசா? அல்லது அதை இயக்கும் அலுவலர்களா? அரசும் தமிழரசு, அலுவலர்களும் பெரும்பாலோர் தமிழர்களே, இருந்தும் ஏன் இல்லை? இவர்கள் அனைவரும் உண்மையில் மொழியுணர்வுடையவர்களாக இருந்தால் இந்நிலை ஏற்படுமா? தமிழன் தமிழனோடு தொடர்பு கொள்ளக்கூட, தமிழால் முடியாதா? உடலில் தோன்றி அவ்வுடலை அழிக்கும் நோய்நுண்ணுயிரிகளுக்கும், இவர்களுக்கும் என்ன வேறுபாடு?

அறிவுப்பயிர் வளர்க்கும் கழனிகளாக விளங்கும் தொடக்கப் பள்ளி முதல் கல்லூரி வரை நடைபெறும் செயல்பாடுகள் கொடுமைகள்தாம் எவ்வளவு? எண்ணவே உள்ளம் பதறும். ஏழை எளிய மக்களின் வரிப்பணத்திலே பெருந் தொகைகளை ஊதியமாகப் பெற்றுக் கொண்டு, மேலும் ஊதிய உயர்வு கேட்டுப் போராட்டம்; தமிழ்ப் படித்தவன் ஒதுக்கப்பட வேண்டும் என்று போராட்டம். இயக்கக் கூட்டங்கள் நடத்த; தொகை திரட்ட; கொள்கை முழக்கம் செய்து பரப்ப; இவற்றிற்கும், திரைப்படம், நடிக நடிகையர், விளையாட்டு இவற்றையெல்லாம் அலசி ஆய, இவற்றுக்கெல்லாம் போக மீதி நேரமிருக்குமானால் பாடம் நடத்தல். இவ்வளவு கடமையுணர்வும், பொறுப்புணர்வும், பண்புணர்வும், மொழியுணர்வும், நாட்டுணர்வும் மிக்க ஆசிரியர்களைப் பார்த்து; அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு வளரும் மாணாக்கர் எவ்வாறிருப்பர்? (இவண் குறிப்பிடும் ஆசிரியர், மாணாக்கர், பெரும்பான்மையோர்கள்?) அவ்வாறு நேற்று வளர்ந்த மாணாக்கர்கள்தாம் இன்றைய அரசு அலுவலர்களாகவும் தலைவர்களாகவும், இந்நாட்டு மன்னர்களாகவும் இருக்கின்றனர். அதன் விளைவுகளைத்தாம் இம்மண்ணிலே அங்கிங்கெனாதபடி, எங்கும், ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு துறையிலும், இன்னும் சொன்னால் ஒவ்வொரு மாந்தனிடமும் காண்கிறோம். நாளைய நிலை பற்றி இன்று கூற இடலாது.

முற்காலத்தில், அரசர்களையும் வளம் படைத்தவர்களையும், தனியாகப் பிரித்துச் சில கதைகளைக் கட்டிவிட்டு அவர்களை உயர்ந்தவர்களாக்கிப், பெரும்பான்மை மக்களை அடிமைகளாக்கி, இவர்கள் அவர்களுக்காக உழைக்கும் அடிமைகள் என்று நம்பவைத்துக் கொழுத்த வாழ்க்கை வாழ்ந்தனர் சிலர். அண்மைக் காலத்தில் அப்புனைவுரைகள் அலசி அம்பலப்படுத்தப் பட்டபின் தமிழன் சிந்திக்கும் திறன் பெற்றுத் தாழ்வுகளையும், இழிவுகளையும் எதிர்த்துத் தன்னிலை உணரும் நிலையையடைந்தான். அது சிலருடைய வாழ்வைத் தாக்குவதாக அமைந்தது. இவன் இனவுணர்வு பெற்று ஒன்றுபட்டால், இந்தப் பழைய சரக்குகள் விலைபோகா, அதனால் நமது பழம் பெருமை பாழாகும் என எண்ணியவர்கள், சாதி, சமயங்கள், குலவேறுபாடு, வருக்க வேறுபாடுகள் பழைய வலிமையை இழந்துள்ளன, எனவே, இனி மொழி நிலையில் பிளவை உண்டாக்குவதே பயன்தரும் என எண்ணிச் செயல்பட்டனர். அதன் விளைவே இன்று தமிழ்ப்படித்தவர்களும், தமிழ் மொழிக்கும், இன மேம்பாட்டிற்கும் உழைக்கும் அறிஞர்களும், தாழ்த்தி ஒதுக்கப்படுவதும், இருட்டடிப்புச் செய்யப்பெறுவதும், வேற்று மொழி படித்தவர், எவ்வகைத் தகுதியும் திறமையும் இல்லாவிட்டாலும், பல்துறை அறிஞராகத் தூக்கிப் பிடித்து வெளிச்சம் போட்டுக் காட்டப்படுவதுமாகிய செயல்கள் நடைபெறுகின்றன.

அன்றும் தமிழன் மாற்றான் கூறிய நச்சுக் கருத்துகளை நம்பிச் சிலர், பலரைத் தாழ்த்தியும், இழிவுபடுத்தியும் கொடுமை செய்தும், இனத்தைப் பிரித்து, ஒற்றுமையைக் கெடுத்து இன முன்னேற்றத் திற்குத் தடையாக இருந்து இரண்டகனை வாழ வைத்தான். கல்வி வளர்ச்சியும், அறிவியலும் குடியாட்சியும் தோன்றிய இன்றும் தாய் மொழி படித்தவன், தாய்மொழியில் படித்தவன், தாழ்ந்தவன், ஒதுக்கப்பட்டவன் ஆகிறான்! வேற்று மொழி படித்தவன், வேற்று மொழியில் படித்தவன் உயர்ந்தவன், அறிஞன், பல்துறை வல்லுநன் ஆகிறான். இன்னும் கொடுமை என்னவென்றால் மேற் கூறியவாறு நடப்பவன் வேற்று மொழியினனாக இருந்தால் நாம் கவலைப்பட வேண்டியதில்லை; பிறப்பால் தமிழனே தமிழனுக்கு தமிழ் இனத்திற்கு இத்தகைய இரண்டகம் செய்து, இன்றும் தமிழனே தமிழின முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக நிற்கிறான் என்னும் நிலையே உள்ளது! எனவே இத்தகைய இன, மொழி இரண்டகர்களுக்கும், உடலில் தோன்றி உடலையே அழிக் கின்ற நோய் அணுக்களுக்கும் என்ன வேறுபாடு?

மொழி இனவுணர்வற்ற தமிழ்ப் பிண்டங்களே! மாந்தப் பெருமைக்குரிய பண்புகளையெல்லாம் ஈகம் செய்து விட்டு வயிறு வளர்ப்பதையே முகாமையாகக் கொள்கிறீர்களா? வயிறு வளர்ப் பதும் இனப் பெருக்கம் செய்வது மட்டும்தான் வாழ்க்கையென்று உங்கள் வேற்றுமொழி கூறுகிறதா? அம்மொழி மக்களின உணர்வு களை அறிந்த பின்னரும் உங்களுக்கு உணர்வு தோன்றவில்லையா? அல்லது உணர்வென்பதே இல்லையா? இனத்தைத் தாழ்த்தியும், காட்டிக் கொடுத்தும் வயிறு வளர்ப்பதுதாம் உங்கள் குறிக்கோளா? நாற்றமெடுத்த சேற்றிலே மகிழ்வோடு படுத்துப் புரளும் பன்றியும் கூடத்தான் தின்று வாழ்கிறது! 0


## 'தமிழ் நிலம்'

**உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய, கிழமை இதழ்!**

| | | |
|---|---|---|
| 1. | தனியிதழ் | விலை உரு. 0.65 |
| 2. | ஆண்டுக் கட்டணம் | உரு. 36.00 |
| 3. | அரையாண்டுக் கட்டணம் | உரு. 18.00 |

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு: தமிழ்நிலம், சென்னை-5.

## 'உண்மை' இதழுக்கு இரண்டு திறந்த மடல்கள்!

1. உண்மையும் தனித்தமிழும்!

அன்புநிறை ஐயா, வணக்கம்.

'உண்மை' 1-6-84-ஆம் பக்கலிட்ட இதழ் எண் 11-இல் பக்கம் 10-இல் 'உயிர்த்தெழும் உண்மை' என்னும் தலைப்பின் கீழ் ஓரன்பரின் மடலினை வெளியிட்டு, அதற்குச் சிறு விளக்கமும் தந்துள்ளீர்கள்.

'தந்தை பெரியார் தனித் தமிழைவிட மக்களுக்குப் புரியும் தமிழைப் பயன்படுத்தினார்' அதுதான் முக்கியம். வேற்றுச் சொல் கலப்பால் ஒரு மொழி இறந்து விடுவதில்லை. மாறாக வளம்பெற்று வளருவதும் உண்டு. 'உதாரணம்'—ஆங்கிலம்; இருப்பினும் 'வாசகரின்' 'ஆலோசனைகள் கவனிக்கப்படும்'.

இதுபற்றிய தெளிவான விளக்கத்தைத் தருவது எம் கடமை:

1. தமிழக வரலாற்றிலேயே மிகப் பெரிய போராட்டமாக உருவெடுத்து ஆட்சியையே மாற்றிக் காட்டியதும் மக்கள் பெரும்பான்மையாகக் கலந்து கொண்டு நிகழ்ந்ததும் இந்தி எதிர்ப்புப் போரே!

2. வேற்றுச் சொல் கலப்பால் வளருகிறது என்றால், சில நூற்றாண்டுகட்கு முன்பு செழிப்போடும், வளப்பத்தோடும் திகழ்ந்த தமிழ்தான், தமிழினம்தான் திராவிட மொழிகளாக திராவிட இனமாக மாறிப்போனது (தமிழம்—த்ரமிள—த்ரமிட—த்ரவிட—த்ராவிட—திராவிடம்) ஒன்றுபட்டிருந்த இனம் கூறுபட்டுப் போனதற்கு காரணியமே, மொழிக் கலப்புத்தான்.

'திராவிட நாட்டுக் கொள்கையைக் கைவிட்டுத், தனித் தமிழ் நாட்டுக் கொள்கையை வலுப்படுத்தினார் தந்தை பெரியார். மொழியால் ஏற்பட்ட பிளவுதானே காரணியம்'.

3. 7-3-26 குடியரசில் தந்தை பெரியார் அவர்கள் பின் வருமாறு குறிப்பிட்டார்.

'பழையன கழிந்து புதியன புகுவதாயிருந்தால் நமக்குக் கவலையில்லை. புதியவை வந்து வலுக்கட்டாயத்தில் புகுந்து கொண்டு பழையனவற்றையும், கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதானால் அதைப் பொறுத்துக்கொண்டு அதற்குச் சார்பாகப் பேசுவது என்பது மொழிக்கு இரண்டகமும், இன வஞ்சகமும் ஆவதோடல்லாமல், தமிழ்த் தாயின் கற்பைத் தமிழ்ப் பகைவர்களுக்குத் தந் நலத்திற்காக விற்றவர்கள் என்றுதான் சொல்லவேண்டும்'. சில பார்ப்பன இதழ்கள் திட்டமிட்ட மொழிக் கலப்பினைச் செய்து வருகிறார்களே!

4. எல்லா ஏந்துகளும் (வசதிகளும்) நிறைவாக இருக்கின்ற நிலையில் கடன் வாங்கவேண்டிய தேவை என்ன வந்தது? 'எர்லி மார்னிங்' எழுந்திருச்சு 'பெட்காஃபி டிரிங்' பண்ணிட்டு, அப்படியே 'பாத்' பண்ணிட்டு, 'லேட்டா டிபன்' பண்ணி, 'ஆ'ஃபீசு'க்குப் போனா 'ஒர்க் பிசி'! 'லஞ்ச் டைம்' முடிஞ்சப்புறம் 'ஆப்டர் நூன்' ஒரே 'போர்' 'ஈவினிங்' 'பிரண்ட்சு' 'மீட்' பண்ணிட்டு, 'பீச்' வரை 'வாக்' பண்ணிட்டு வந்தா 'நைன் ஓ கிளாக்' 'ஒய்ப்' ஒரே 'டல்லடிக்கிறா'!—இப்படி மாற்று மொழி கலப்பதால் மொழி வளரும் என்கிறீர்களா?

5. மொழியைப் பற்றித் தாங்கள் அதிகக் கவனம் செலுத்த வில்லை என்பதானால், தமிழில் பூசனை செய்தல் வேண்டும் எனப் போராடுவது எதற்காக? ஒருவகையில் அது மொழிப் போராட்டம் தானே, (மொழிக் கலப்புப் போராட்டம்)

6, 21-7-1939—கோவை மாணவர் மன்ற உரையில் தந்தை பெரியார் அவர்கள், தூய தமிழில் எழுதப்படவேண்டிய முகாமை யைக் குறிப்பிட்டு விட்டுத் தொடங்கினார் :

'எல்லாம் இல்லை என்றாலும் மற்ற பல இந்திய மொழிகளை விட அதிகமான முன்னேற்றத்தைத் தமிழ் மக்களுக்கு அளிக்கக் கூடிய கலைகள் பழக்க வழக்கங்கள் அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன என அறிகிறேன். ஆதலால் தமிழுக்குக் கேடு உண்டாகும் என ஐயுறத்தக்க வேறு எந்த மொழியும் விரும்பத்தகாததேயாகும்'.

7. நம் மொழியின் சிறப்பினை ஐயா அவர்களே, 'நமது திராவிட மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற புலவர்களை (பண்டிதர் களை)க் கொண்டு அந்தந்த மொழியிலுள்ள வடமொழிச்சொற்கள் அத்துணையையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், எஞ்சி நிற்கும் சொற்கள் அத்துணையும் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களாகவே இருக்குமென்று என்னால் அறுதியிட்டுக் கூறமுடியும் அகராதி கொண்டு மெய்ப்பிக்கவும் முடியும்' (எழுத்துச் சீர்திருத்தம் பக்கம் 12) என்று குறிப்பிடுகிறார். தமிழ்மொழி நூல்களில் மதத்திற்கு எவ்வகை அடிப்படையும் இல்லை எனவும் ஐயா அவர்கள் விளக்குகிறார் (எழுத்துச் சீர்திருத்தம், பக்கம்-19)

8. 'சங்கமித்ரா' என்ற பெயர்கூட மக்களுக்குப் புரியும் வகையில்தான் பயன்படுத்தப்படுகிறது என்றால் எந்த வகையில் என்பதே எமக்கே புரியவில்லை. உங்களிடம் நிறைய தூய தமிழன்பர்கள் இருப்பது தெரியாவிட்டாலும், "இறையனை'க் கூடவா அறிய முடியவில்லை.

9. மடலெழுதிய அன்பருக்காகத் தூய தமிழினைப் பயன் படுத்தச் சொல்லவில்லை. மொழிக்காக—தமிழர்களுக்காகத்தான். ஆயின், நீங்கள் அன்பரின் கருத்தரை 'கவனிக்கப்படும்' என்றதன் மூலம் வழுக்கிவிட்டீர்களே! நமக்காகத் (இனத்துக்குத்)தான் தூய

மொழி நடை தேவை, மொழியால் மட்டுமே நாம் ஒன்று கூட வேண்டும்! முடியும்!

10. எதிர்கால வரலாற்றில், 'தமிழ்—தமிழினம் இருந்ததாகத் தெரிகிறது. ஆயின் இவை சமற்கிருதத்திலிருந்து பிரிந்த கிளை மொழி என்பதற்குச் சான்றுகள் உள' என்று இடம் பெற்றுவிடக் கூடும் என்ற அச்சவுணர்வைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. 'ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாயபற்று மொழிப்பற்றேயாகும், மொழிப் பற்றிராதாரிடத்து நாட்டுப் பற்றிராதெனபது உறுதி. நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டியங்குவது, ஆதலால் தமிழர்களுக்குத் தாய்மொழிப்பற்றுப் பெருக வேண்டுமென்பது எனது வேண்டுகோள்', என்று 1924-இல் திசம்பர்த் திங்கள் திருவண்ணாமலை பேராயக் (காங்கிரசுக்) கட்சி மாநாட்டில் தந்தை பெரியாரின் உரையை நினைவிற்குக் கொண்டுவருகின்றேன்.

12. உங்களை அறியாமலேயே பார்ப்பன மொழி ஆளுமைக்கு அடிமையாகிவிட்ட இழிநிலையை எண்ணி வருந்தாமலிருக்க முடியவில்லை. இக்கால் 'தளபதி' வீரமணி அவர்கள், நேருரை ஒன்றில் படிப்படியாக 'தூய தமிழ் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்' என்ற கருத்தினை வெளியிட்டுள்ளதை நினைவுபடுத்தி, மக்களுக்குப் புரியும் வகையில் கருத்துகளை வெளியிட, பேச மொழிக்கலப்பு தேவை என்பது போலும் வீணான வழக்கினைத் தவிர்த்துத் தூய தமிழ் நடைமுறையை பார்ப்பன வீச்சுக்குறைவான நாட்டுப்புற மக்களிடம் போய்க் கற்றுக் கொள்ளுங்கள் என்ற வேண்டுகோளோடு முடிக்கின்றேன். (மேற்கோள்களில் கலப்புச் சொற்கள் திருத்தப்பட்டுள்ளன.) நன்றி. இவ்வண்ணம், அன்புடன்

— தென்மொழி 'கனல்' தாராபுரம்.

## 2. 'உண்மை'யிதழின் இரண்டகம்!

பேரன்புடையீர்,

வணக்கம். தங்களின் 'உண்மை' 1-8-84 (மலர் 15-இதழ் 15) இதழின் பக்கம் 22-இல் வெளியாகியிருந்த 'உண்மை'யின் முதன்முறை வாசகர்களுக்கு என்ற அறிவிப்பைக் காண நேர்ந்தது. உண்மையிலேயே 'உண்மை'ச் செய்தியினை அறிந்து உளம் நோக வேண்டியிருந்தது. நம்மவரின்—நம்மினத்தவரின் இனப்பற்றை இழிந்த நிலைகளை, தாழ்ந்த நிலைகளை எண்ண வேண்டி வந்தது. 'தமிழனைப் பிறர் யாரும் தாழ்த்தவில்லை' அவன் தப்பியே தாழ்த்துகிறான். தமிழனைப் பிறர் யாரும் வீழ்த்தவில்லை. அவன் தமயனே வீழ்த்துகின்றான்'—என்ற அறிஞர் தம் வரிகள் எவ்வளவு 'உண்மை' என்பதை உணராமலிருக்க முடியவில்லை. ஆம் தமிழ்க் குமுகாயம், உலகில் உள்ள மற்ற குமுகாயங்களைப் போல மானமும், அறிவும் பெறவேண்டும் என்ற கொள்கை (லட்சியத்து)க்காகத் தமிழ் நாட்டில் பாடுபட ('உண்மை'யைத் தவிர) வேறு ஏதேனும் ஒரே ஒரு—ஒரே ஓர் இதழ் உண்டா? இல்லை—உறுதியாக இல்லை.' என்ற வரிகளைப் படித்த பின்னர்தான் மேற்கண்டவாறு எண்ண வேண்டிவந்தது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தமிழ்மொழி, இன நாட்டு விடுதலையே தம்முடைய மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு, எவ்வகையான அரசியல், மற்றும் ஆளும் அதிகாரக் கூட்டத்தின் அரவணைப்பும் இல்லாது, பதவியும், பட்டமும் பாராது, ஒரு சிறு விளம்பரம்கூட இல்லாது, தாம் கொண்ட கொள்கையில் இம்மியும் பிசகாது, எண்ணியும், எழுதியும் ஏன் அதன்படி வாழ்ந்தும் வருகின்ற பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ்மொழி, இனம், நாடு என்ற முக்கொள்கைகளுக்கு உரமூட்டும் மூன்று இதழ் மணிகளாம், அவர் தம் கண்ணொளியாம், மூச்சுயிர்ப்பாம் 'தென்மொழி'யும் 'தமிழ்ச்சிட்டு'ம் 'தமிழ்நிலமு'ம் பகுத்தறிவு மரபினராம்,புலவராம் உங்கள் புலமைக்கும் பகுத்தறிவுக்கும் புலப்படவில்லையா? அதற்கு என்ன காரணியம்? இன்றால் உங்கள் புலமைக்கும் பகுத்தறிவுக்கும் எட்டாத ஒன்றாக அவை இருக்க வேண்டும். இன்றேல், வேண்டு மென்றே நீங்கள் அவற்றை மறைக்கின்ற இருண்டகத்தைச் செய் கின்றீர் என்பதாக இருக்க வேண்டும். அப்படி இருப்பின் உங்கள் புலமையையும், பகுத்தறிவையும் ஐயுற வேண்டிவரும். அப்படி இரண்டகம் செய்வது அவருக்கு மட்டுமன்று. நம்மினத்துக்கும், நமக்கும் ஏன் உமக்கே கூடத்தான் தாழ்வு என்பதை மறவாதீர். ஓர் உண்மையை—ஒரு வரலாற்றை—இனமீட்பு முயற்சிகளை இதன் மூலம் மக்கள் அறியாதவாறு மறைத்து வைக்கும் கொடுஞ்செய லில் இறங்கிவிட்டீர்கள் என்றே நமக்குப்படுகிறது. நாம் நம் வரலாற்றை மறந்தமையால், இழந்தமையால் அடைந்து வரும் துன்பங்களை அழுதாலும், அல்லது அடிக்கடிக்கு எழுதினாலும் தீர்ந்துவிடுமா? ஆரியப் பார்ப்பனர்கள் அளவிடற்கரிய சூழ்ச்சிக ளால் நம் வரலாற்றை மறைத்தனர் என்றால், நீர் உம்மையே— உம் வரலாற்றையே அழிக்க முன் வந்து விட்டீரே. கண்ணெதிரே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஓர் 'உண்மை' அறிஞரின்—தொண் டரின்—தொண்டை மறைக்கின்ற முயற்சியை அந்த அறிஞரின் இனத்தவனே செய்கின்றான் என்ற இழிநிலையைத் தமிழினத்தைத் தவிர வேறெந்த இனத்திலும் பார்க்கமுடியுமா? முடியவே முடியாது. இஃது உண்மை. உண்மை!!

மற்ற இதழ்கள் விளம்பரத்திற்காக, காசுக்காக விலைப்போகக் கப்படுகின்றன என்று சொல்கின்ற நீர், தன் வாணாளில் ஒரு காசுக்குக்கூட விளம்பரத்தைத் தன் மேனியில் ஏற்றுக்கொள்ளாத 'தென்மொழி'யாம் நன் மொழியின் பணியை மறைத்தது எதற்காகவோ?

ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்! நா. பார்த்தசாரதி அவர் கள் 'தினமணிக்கதிர்'ன் ஆசிரியராக இருந்தபொழுது கொள்கைக் காக நடைபெறும் இதழ்கள் எவை? என்ற வினவுக்கு விடை யளிக்கும்பொழுது, நான்கைந்து இதழ்களைக் குறிப்பிட்ட பின்னர் இறுதியாகத் 'தென்மொழி'யைத் தவறாது குறித்திருந்தார். உண்மையான அறிவு முயற்சியைப் பார்ப்பனர்கள் கூட மறைக்க விரும்பவில்லை. கருத்து வேறுபாடாயினும் அறிவை மதிக்கின்ற பண்பு அவர்களுக்கு இருந்தது. ஆனால் நீங்கள்?

இனி உங்களின் நோக்கும், போக்கும் இதுவானால் நீங்கள் செய்து வருகின்ற இனமானப் பணிகள் ஓர் எள் மூக்கத்துணையும் பயன் விளைவிக்காது. மாறாக, சாண் ஏறி முழம் சறுக்கலுக்கு ஒப்பாகும் என்பதைக் கல்லின்மேல் செதுக்கி வைத்துப் பார்த்துக் கொண்டிருங்கள். அறிஞரைப் போற்றாத, மதிக்காத ஒரு நாடும் உயர்ந்துவிடப் போவதில்லை. மக்களின் அறியாமையும் நீங்கவே நீங்காது.

பாவேந்தரை மதிக்கின்றோம் என்று சொல்கின்றீர்களே, அவர்கள் வரியை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அவையெல்லாம் வெறும் சொற்கள் என்று எண்ணாதீர்கள். எதிர்கால அறிவு வரலாற்றில் உங்களுடைய இரண்டகச் செயல்கள் — இனத்தை வஞ்சிக்கின்ற செயல்கள் மறவாது குறிக்கப்பெறும் என்பதை நினைவில் நிறுத்துங்கள்.

"காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?"

— அன்பன், செ. திருமேனி, பல்லடம்.

படி: ஆசிரியர் தென்மொழி, சென்னை-5.

---

# தமிழர்களிடமிருந்து பண்டர்பூரின் உருவாக்கம்!

(பண்டர் என்பது மராத்திய மாநிலத்திலுள்ள புகழ் பெற்ற வைணவத் தலமாகும்.)

'பட்டர்' என்றால் பக்தி இசை அல்லது 'பாடுவோர் குழு' என்ற பொருள் தமிழ் மொழியில் இருந்தது. 'அரங்கம்' என்றால் 'ஆறு' அல்லது 'ஆற்றங்கரை'. குறிப்பிட்ட ஆற்றங்கரைப் பகுதியில் பாடுவோர் குழு முதல் 'பட்டரங்கம்' என்று சொல்லப்பட்டது. இந்தத் தமிழ்ச் சொல்லிலிருந்துதான் 'பண்டர்பூர்' என்ற பெயர் வந்திருக்க வேண்டும். பண்டர்பூர் திருத்தலம் நிறுவுவதிலும் தமிழ் மொழியாளர்களின் பெரும்பான்மை இருந்திருக்க வேண்டும் என்று திரு. டொங்கரே அவர்கள் (பண்டர்பூரில் நடைபெற்ற கருத்தரங்கில்) கூறினார்கள்.

— கேசரி (மராத்திச் செய்தித்தாள்)

புனே, 8—2—1984 பக்—1

செய்தி: இராக. விவேகானந்த கோபால், இளநிலை ஆய்வாளர் (மராத்தி), தமிழ்ப் பல்கலைக் கழகம்.

— நன்றி. செய்தி மலர்.




(சுருக்க மதிப்புரைக்கு நூலின் இரண்டுபடிகளும்
விரிவான மதிப்புரைக்கு ஐந்து படிகளும்
அனுப்ப வேண்டும் )

## I. முத்தாரம்

**ஆசிரியர் :** தமிழ்மணி எல்லோன்.

**வெளியீடு :** சே. கதிரேசன், 29805, சாலான் பெண்டாகாரா. ஈப்போ, மலேசியா.

**பக்கங்கள் :** 112, விலை: 3 மலேசிய டாலர்.

வெளி நாடுகளில், குறிப்பாக, சிங்கை, மலேசிய நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களில் பலர் குறிப்பிடத்தகுந்த எழுத்து வன்மை பெற்றவர்கள். சிலர் நல்ல பாவன்மை பெற்றவர்கள். அவர்களுள் ஈப்போவில் வாழும் பாவலர் தமிழ்மணி எல்லோன் ஒருவராவர். இவர் ஈப்போ பாவாணர் தமிழ்மன்ற அமைப்பாளர் பாவலர் குறிஞ்சிக்குமரன் (சா.சி. சுப்பையா) அவர்கள் வளர்த்தெடுத்த தூயதமிழ் மாணவர்களுள் ஒருவர். பாவலரேறு அவர்களால் 'நற்றமிழ்க் கதிர்' என்று அன்பொழுக அழைக்கும் பெருமை பெற்றவர், அவரின் முதல் பாடல் தொகுதி இது.

இத் தொகுதியுள் மொழி, நாடு, காதல், சான்றோர், குமுகம், பொதுமை என்னும் ஆறு பகுதிகளில் 54 பாடல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. மொழி என்னும் தலைப்பில், தமிழுக்கு இவர் பாடும் அம்மானையுள் ஓர் அழகிய பாடல் இது:

*ஊழி முதற்கொண்டே ஊறுகளில் ஊர்ந்துவந்து*
*ஆழி புடைப்பினிலும் அஞ்சவில்லை அம்மானை!*
*ஆழி புடைப்பினிலும் அஞ்சாத தேன்தமிழை*
*நாழிக் கிணறு நனைத்துவிடும் அம்மானை?*
*நண்டு செலவேறிக் கொண்டகதை அம்மானை!*

*நல்ல கருத்து! அருமையான கற்பனை!*

இவர் தாம் வாழ்ந்துவரும் மலேசியத் திருநாட்டை இவ்வாறு புகழ்ந்து, தம் வாழ்நன்றி மறவாமையை வாயார வாழ்த்துகிறார்!

தேடரிய கனிவளமும் திசைகொழிக்கும் பொருள்வளமும்
செம்மை கூட்டும்,
காடரிய பொழில்வளமும் காயாத மழைவளமும்
கருணை யாகிப்
பீடரிய தோற்றத்தில் பிறந்தவளே அன்பூக்கின்
பெற்றி வாய்ந்து
நாடரிய நாடெனவே நடைபயின்ருய் மலைமகளே
நல்வ ணக்கம்!

இவரின் காதல் உள்ளத்தில் களிதுள்ளுகிறது! பாட்டிலும் அத் துள்ளலைப் பாருங்கள்!

தும்பை மலர்நிறப் பல்லினள்—தேன்
சொட்டும் சுவைத்தமிழ்ச் சொல்லினள்—ஒளிச்
சுடர்மேவிய கொடியோஎழில்
உடலோவிய தொடியோஎன
அம்பைக் கயற்கண்ணில் தேக்கினள்—உள
மாடப் புயலெனத் தாக்கினள்!

தேனடையென் றிதழ்க்காட்டிச் சிரிக்கின்ருய் நீ!
சிரிப்பினிலே யாழிசையை விரிக்கின்ருய் நீ!
வானடையென் நிலவுமுகம் தரிக்கின்ருய் நீ!
வடிவழகில் சிலையதனைப் பழிக்கின்ருய் நீ!
மானடையென் விழிகாட்டி அலைக்கின்ருய் நீ!
மலரடியால் நடப்பயின்று நடிக்கின்ருய் நீ!
நாணடையென் எல்லையிலே உயிர்கலக்கும்
நாளதனை! எண்ணியெண்ணிக் கழிக்கின்றேன் யான்!

பாடல் ஒவ்வொன்றும் தித்திக்கின்றது! நல்ல, தூய தமிழ்நடை! பாவலரைப் பல்வகையானும் பாராட்டுகிறோம்.

2. புரட்சிப் பொன்மொழிகள்

ஆசிரியர் : அருள்வாக்கு
திருப்புகழடிமை சண்முகதாசன்.
வெளியீடு: திருப்புகழரசு பதிப்பகம், 5. மாடல் அவுசு சாலை,
சி.ஐ.டி. நகர், நந்தனம். சென்னை-35.
பக்கங்கள் : 150. விலை: 8.50.

இந்நூல், அருள்வாக்கு திருப்புகழடிமை சண்முகதாசன் அவர்கள் எழுதிய 542 பொன்மொழிகளின் தொகுப்பாகும். கடவுள், தவம், இறையன்பு, அறிவு, ஒழுக்கம், அறியாமை, ஆசைகள், சாதி, வறுமை, நாடு, குலமகள், காமம் முதலிய 25 தலைப்புகளில் தொடுக்கப்பெற்றுள்ளன. இறைவணக்கமாகவும், குருவணக்கமாகவும், திருப்புகழ் அடிமை புலம்பலாகவும் மூன்று பாடல் தொகுதிகளும் உண்டு.

இந்நூலுக்கு வாழ்த்துரைகளாகவும் அணிந்துரைகளாகவும் திருவாளர்கள், தமிழ்நாடு சட்டப்பேரவைத்தலைவர் க. இராசாராம்

கி.வா. சகந்நாதன், பர்.சி. பாலசுப்பிரமணியன்,காஞ்சி காமகோடி பீடாதிபதி, நடுவர் எசு. சாமிக்கண்ணு ஆகியோர் நல்லுரைகள் வழங்கியுள்ளனர்.

சிலம்பொலி செல்லப்பனார் சிறப்புரையும், திருமுருக கிருபானந்தவாரியார், பெரும்புலவர் அறிந்தார்க்கினியனார், பர். இரா. சேது முதலியோர் சிறப்புப் பாயிரங்களும், பேரா. ப. இராமன், உரைகல் என்னும் தலைப்பில் ஒரு திறனாய்வுரையும் வரைந்துள்ளனர்.

இறைவனைப் பற்றி ஒரு பொன்மொழி இவ்வாறு கூறுகிறது :

''இறைவன் ஒரு சிற்பியினால் செதுக்கப்பட்ட சிலையிலோ, ஓர் ஓவியனால் தீட்டப்பட்ட ஓவியத்திலோ, ஒரு கவிஞனால் எழுதப்பட்ட கவிதையிலோ இருப்பதாகத் தெரியவில்லை. ஓர் உண்மையான பக்தனின் அன்பில்தான் இறைவனைக் காண முடியும்''

அறத்தைப் பற்றி ஒன்று:

''சில பாவிகளைத் திருத்த நினைப்பது சுட்ட உடலை உயிராக்கி எழுப்பி நடப்பிப்பதற்கு ஒப்பாகும்''

அறியாமை பற்றி ஒரு பொன்மொழி :

''அடிக்கடி தவறு செய்துவிட்டுக் கோயிலுக்குச் செல்வது, தண்ணீர்த் துறைக்கு, அடிக்கடி அழுக்குத் துணி சென்று, அடிபட்டுச் சீக்கிரம் கிழிந்து போவதற்கு ஒப்பாகும்''

போலிகளைப் பற்றி ஒரு பொன்மொழி :

''கல்லாதவன் கவிதையும் கழுதை கத்தலும் ஒன்றே''

சாதியைப் பற்றி ஒன்று:

''கடவுள் சாதிகளைப் படைத்தாகச் சில நூல்கள்கூறுகின்றன. அஃது உண்மையாக இருக்குமானால், அப்படிப்பட்ட கடவுள்களும் நமக்குத் தேவையில்லை... அப்படிப்பட்ட நூல்களும் நமக்குத் தேவையில்லை.''

— இவ்வாறு சிறந்த பல கருத்துகளைப் புரட்சியாகவும் புதுமையாகவும் கூறுகிறது நூல். ஆசிரியரைப் பாராட்டுகின்றோம்.

3. தேன் ஊற்று

ஆசிரியர் : கவிஞர். (பாவலர்) பாரி.

வெளியீடு : தமிழ் இலக்கிய மன்றம்,
31, ஏ. வெள்ளாத்தூர் முதலி வீதி,
சோழலிங்கபுரம் 631102. வ. ஆ. (மா.வ.)

பக்கங்கள் : 80. விலை : 4-00.

ஆசிரியரின் 42 பாடல்கள் கொண்ட பாத்தொகுதி இது. பாவலரின் உறுதியான உணர்வு முதல் பாடலிலேயே விளங்குகிறது.

'அழுத கண்ணீர் மாறும் வரையில்
அறமும் புவியில் நிலைக்கும் வரையில்,
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
போரின் அச்சம் நீங்கும் வரையில்,
பொய்ம்மை வேடம் களையும் வரையில்
தேர்ந்த அறிவும் பண்பும் பெற்றுத்
தேச மக்கள் உய்யும் வரையில்,
உறுதி நெஞ்சில் தோன்றும் வரையில்,
உழைப்பை மக்கள் போற்றும் வரையில்,
இறுதிமூச்சு நிற்கும் வரையில்
இறப்பை நானும் தழுவும் வரையில்,
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
எழுதிக் கொண்டே இருக்கப் போகிறேன்-கவிதை
எழுதிக் கொண்டே இருக்கப் போகிறேன்!

— என்று கூறுகிறார் பாவலர்,

தமிழரின் திருமறை என்னவென்பதைத் தமிழன் அறியவில்லையே!
— என்று கவல்கிறார் ஒரு பாடலில்.

'ஏசுவை வணங்கும் கிறித்தவனோ—எம்
இனத்தார் மறைமொழி 'பைபிள்' என்றான்!
மாசில் நபியை வணங்கிடுவோன்—எம்
மறைமொழி 'குர்—ஆன்' எனச்சொன்னான்!
பாசம் மிகவே தமிழனையும்—உன்
புகழ்சேர் மறைமொழி கூறென்றேன்!
பேசா தவனும் நடந்திட்டான்—நான்
பேதை யெனவே நினைத்திட்டான்!

வள்ளுவன் தந்த திருக்குறள் நூல்—இங்கு
வாழும் தமிழரின் மறைமொழியாம்!
தெள்ளத் தெளிய இஃதுணரான்—உயர்
தீந்தமிழ்க் கின்னல் விளைப்பவனே!
பள்ளம் புகுந்திடும் நீரெனவே—இப்
பைந்தமிழ் நூலின் சிறப்பறிந்தே
உள்ளம் வியந்தார் பிறநாட்டார்—நாம்
உணரா திருப்பின் நகையாரோ?'

— என்பது அப் பாடல்!

ஒரு பாடலில் தம் மனையரசியைப் பாராட்டும் பாங்கு மகிழ்ந்து போற்றத்தக்கது!

அன்பென்னும் உணர்வோங்கத் துணையானாய்—என்
ஆசைத்தீ வளர்க்கின்ற நெய்யானாய்!
இன்பத்தை யளிக்கின்ற உறவானாய்!—என்
இல்லத்தின் உயர்வுக்கு வித்தானாய்!

## மொழிப்பிணக்கு- ஒன்று பற்றி மற்றொன்று

பிராகிருத மொழியைப் பற்றி, சமற்கிருதத்தில் 'பாலான மகிலான புத்திமந்தான பாஷை' (குழந்தைகள், பெண்கள், முட்டாள்களுடைய மொழி) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சமற்கிருத நாடகங்களில் அரசர்கள், அந்தணர்கள் முதலிய உயர்ந்தோர் எனக் கருதப்பட்டவர்கள் சமற்கிருத மொழியில் பேசுவதாகவும், பெண்கள், ஏவலாள், நகைச்சுவையாளர்கள் போன்றோர் பிராகிருதத்தில் பேசுவதாகவும் எழுதப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

அதுபோலவே சமற்கிருத மொழியைப் பற்றிப் பிராகிருத மொழியில் 'டச்சசு சக்கய கவ்வம் சக்கய கவ்வம் ச நிம்மியம் ஜேண' சமற்கிருதபாவியத்தையும், அதை எழுதியவர்களையும் கொளுத்துங்கள் என்று கூறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இராசசேகரர் எழுதிய கற்பூர மஞ்சரியில் 'பெண்களைப் போன்று, மென்மையானது பிராகிருத மொழி; ஆண்களைப் போன்று கரடு முரடான மொழி சமற்கிருதம்' என்று கூறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

— ஆ. கார்த்திகேயன்,

பிராகிருத இளநிலை ஆய்வாளர்.

— நன்றி, செய்தி மலர்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

எனக்காக இசைமீட்டும் குயிலானாய்! —நீ
என்தோளில் படர்கின்ற கொடியானாய்!
மனைதன்னில் நல்லாட்சிச் செயலானாய்!—என்
மனையரசி எனும்பேரைப் பெறலானாய்!

இவருடைய நோக்கம் ஒரு பாடலில் தெரிகிறது.

தாழ்வற்ற சமுதாயம் உருவாக்குவோம்!—மண்ணில்
தடையாக இருப்போரைச் சருகாக்குவோம்!

என்று வீர முழக்குகிறார் பாவலர்!

பாடல்கள் அனைத்தும் நல்ல தமிழில், கருத்தும் உணர்வும் கலந்து இன்பமூட்டுகின்றன! ஆசிரியரை வாழ்த்துகின்றோம்.

— துலை.

---


தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்

**இவை தமிழல்ல**

(அயற்சொல் அகராதி)

விலை: 10-00; அஞ்சல் செலவு: 1-00; பதிவஞ்சல் செலவு: 5-00

அறிவன் பதிப்பகம்: 2/5, காளிகோயில்தெரு, தமிழூர்-புதுச்சேரி-9.

# தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி சுவடி — 20, ஓலை 5-6-இல் வெளியிடப்பெற்ற அறிக்கையின்படி, தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல்கள் கீழே கொடுக்கப் பெறுகின்றன.

**1. வாழ்நாள் உறுப்பினர்கள் பட்டியல் :**

**தென்மொழி :**

| | | | |
|---|---|---|---|
| 11 | சி. இராமச்சந்திரன், | கரூர் | 200.00 |
| 12 | பழ. கதிரேசன், | தாராபுரம் | 200.00 |
| 13 | கா. அரசு, | வெங்காலூர் | 200.00 |
| 14 | க. செகந்நாதன் | சென்னை | 200.00 |

**தமிழ்ச்சிட்டு :**

| | | | |
|---|---|---|---|
| 7 | சி. இராமச்சந்திரன், | கரூர் | 120.00 |
| 8 | எம். சேரலாதன், | வெங்காலூர் | 120.00 |

**2. பத்து உறுப்பினர்கள் சேர்த்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள் :**

**தென்மொழி :**

| | | | |
|---|---|---|---|
| 4 | நூலகர், கீரனூர் | 10 உறுப்பினர்கள் 10×51 | 150.00 |
| 5 | சோ. முத்துமாணிக்கம், பழனி | 10 உறுப்பினர்கள் 10X15 | 150.00 |
| 6 | நாவை-சிவம் மணப்பாறை | 10 உறுப்பினர்கள் 10X15 | 150.00 |

**தமிழ்ச்சிட்டு**

| | | | |
|---|---|---|---|
| 2 | நாவை சிவம், மணப்பாறை | 10 உறுப்பினர்கள் 10X6 | 60.00 |

**3. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள் :**
**26-6-84 முதல் 31-8-84 முடிய**

| | | | |
|---|---|---|---|
| 9 | மெய். அருண்மொழியன், | தங்கச்சிமடம் | 10.00 |
| 10 | அ. பொன்னுசாமி, | கொக்கராயன்பேட்டை | 5.00 |
| 11 | பாசறை. மணிமிடற்றன், | மயிலாடுதுறை | 10.00 |
| 12 | ஒடவை. தமிழ்வேந்தன், | ஒட்டன்சத்திரம் | 10.00 |
| 13 | சி. இராமச்சந்திரன், | கரூர் | 681.00 |
| 14 | டேனியல் செபராசு, | பால்கோ | 15.00 |
| 15 | சொ. முத்துமாணிக்கம், | பழனி | 5.94 |
| 16 | தமிழ்மாணிக்கம், | கோவை | 0.60 |

0: 1019 : அன்புடையீர், தங்கள் இதழில் கோவிந்தனார் ஆங்கில மருத்துவக் கட்டுரை எழுதிவருகிறார். தமிழுக்காக எவ்வளவோ பாடுபடுகிறீர்கள். தமிழில் உள்ள ஒரே அருமை அறிவியலான சித்தமருத்துவத்தில் ஏன் உங்கள் கவனம் செல்ல வில்லை? நீங்கள் மட்டுமல்லர், தமிழ் தமிழ் என்று எப்போதும் மூச்சுக்கு மூன்றுமுறை சொல்லிக்கொள்ளும், எத்தனை எத்தனையோ தமிழ்ப்பாவலர்கள், அறிஞர்கள், மேதைகள், அனைவரும் சித்த மருத்துவம் என்று ஒன்று இருப்பதாகவே கண்டுகொள்வதில்லை? 'மூலிகை மணி" கண்ணப்பர் என்று ஒருவர் பிறக்காவிட்டால் இன்று சித்த மருத்துவம் இருக்குமிடத்தைப் புதைபொருள் துறையாளர்தாம் கண்டுபிடிக்கவேண்டும். நீங்களும் வெகு காலம் நலமுடனிருந்து தமிழை வளர்க்கவேண்டுமாயின் பண்டைய தமிழர் தம் இயற்கை மருத்துவநெறியாம் சித்த நெறியைக் கடைப்பிடிப்பீர்களாக!

— சித. வைரவன், சென்னை-7.

0: 1020 : தூங்கும் தமிழரை எழுப்பிடும் தாயோய்!

நலம். நாடுவதும் அதுவே. நீண்ட இடைவெளிக்குப் பின் மடல் வழியே தங்களைச் சந்திப்பதில் பெருமை அடைகின்றேன். சென்னையில் தங்களை நேரில் சந்தித்து உரையாடிய பின்னும் தென்மொழி அலுவலகத்தை நேரில் பார்த்த பின்னும்தான் தங்களைத் தூற்றுவாரின் போலிப்பேச்சுகள் தெற்றென விளங்கியது. உண்மையிலேயே நீங்கள் ஒரு தனி மாந்தர்தான், உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்பதற்கேற்ப பாவாணரின் சரியான உருவாக்கம் தாங்கள். உங்களை நேரில் காணும்போதுதான் நான் அற்றை நாளில் நம் தமிழ்ச் சித்தர்கள் இவ்வாறு இருந்திருப் பார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. தமிழ் மாமுனியாகிய திருவள்ளுவரே பெருஞ்சித்திரனாராகி வந்திருப்பாரோ என்று ஐயுறத் தோன்றுகிறது. எடுப்பான தோற்றம்.

அணைப்பட்டியில் நடந்த தென்மொழி உரவோர் பயிற்சி வகுப்பிற்குக் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் வந்து கலக்க எண்ணியிருந்தேன். இறுதியில் எனக்குள்ள அலுவலகப் பணி முடுக்கத்தில் அதைப்பற்றி எண்ணமுடியாமல் போய்விட்டது. பொருள் ஏந்திருந்தும் வாய்ப்பினை இழந்து விட்டேனே என்று எண்ணி அலமற வேண்டியுள்ளது. தமிழ்நிலம் வந்த பின்றை தான் அப் பயிற்சி வகுப்பு பற்றி எண்ணினேன்.

— மெய். அருண்மொழியன், தங்கச்சிமடம்.

0: 1021 : பேரன்பு கெழுமிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம்.

யான் தங்களிடம் கூறியாங்கு சூன் 1,2 ஆகிய நாள்களில் தில்லியில் நிகழ்வுற்ற இந்தியப்பல்கலைத் தமிழாசிரியர் மன்றப் பதினொருவது கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரையைப் படித்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்றேன்.

பேராளர்களின் (Delegate) அறிமுகம் நிகழ்ந்த காலை, யான் ஒரு தனித்தமிழ்த் தொண்டன் ஆர்வலன் என்று குறிப்பிட்டேன். முனைவர் ஆறு. அழகப்பன் உட்பட அனைவரும் இத்தகைய உணர்வும் உந்துதலும் தமிழ் ஆய்வாளர்களிடையே பொலிந் தியங்க வேண்டுமென வலியுறுத்தினர். தில்லித் தமிழ்ச் 'சங்க' வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. ஆறு. அழகப்பனார் அவர்கள் தங்களைப்பற்றியும், தனித்தமிழ்த் தொண்டு குறித்தும் நெஞ்சம் நெகிழ எடுத்துரைத்தார்கள்.

மேலும் திருமிகு. அருளி அவர்களின் 'இவை தமிழல்ல'!— என்ற நூலைக் கையில் வைத்துக்கொண்டு, பேச்சு வழக்கில்

எத்தனை மொழிச்சொற்கள் இன்று நம் மொழிச் சொற்களோடு ஊடுருவி விட்டன என்பதை அந்நூலிற் காட்டியுள்ள புள்ளி விளக்கத்துடன் கூறினார். நான் அவர்களிடம் அணைப்பட்டி நிகழ்ச்சி குறித்துக் கூறினேன். வரும் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை (தமிழ்) மாணவர்கட்குத் தங்களின் கனிச்சாறு, கொய்யாக்கனி, ஐயை போன்ற படைப்புகளைப் பாடநூலில் சேர்க்க எண்ணியுள்ளதாக என்னிடம் தனியே உரையாடுங்கள் எடுத்துரைத்தார். மேலும் உரிய நேரத்தில் தங்கட்குச் சிறப்புச்செய்து பெருமைப்படுத்தப் போவதாகவும் அழுத்தம் திருத்தமாக என்னிடம் கூறினார்.

— கடலூர் மணிமாறன், கிருட்டிணராயபுரம்

**0: 1022:** அன்புடையீர் வணக்கம். ஏறத்தாழ இருப தாண்டுக்காலத் தென்மொழித் தொடர்புடையேன். தங்கள் தூய தொண்டு என்றும் சிறக்க யானும் என் கடுகத்துணைப் பரிசனை யேனும் ஆற்றும் அவா மிக்குடையேன். எனினும் வாழ்க்கைக் கடலில் எழுகின்ற சூறாவளிகளும் புயல்காற்றும் கொந்தளிப்பும் என் கொள்கைக் கலனைக் குறித்த இடம் சேர்ப்பதிலே மிகுந்த தடைகளாகிவிட்டன. இருப்பினும் எஞ்சியுள்ள சின்னாள்களி லாவது இயன்ற பங்கினை ஆற்றவல்ல வலிமையினை இயற்கை யளிக்குமாயின் நன்றெனக் கருதுகிறேன்.

— பெ. இளவரசு க.மு;ஆ.ப, சென்னை-78.

**0: 1023:** மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம் பல. ஆரியப் பார்ப்பன வல்லாண்மையின் நரிக்குணத் தால் தன் நிலை இழந்த ஏதிலித் தமிழர்களின் மொழி-இனநல எழுச்சிக்காகத் தம்மையே மெழுகுத் திரியாக்கி ஆற்றும் தங்கள் பணி நாளைய தமிழின விடுதலைக்கு இன்றைய வித்தாகும் என் பதில் சற்றும் ஐயமில்லை. பார்ப்பனர்களை விடவும் நம் ஆரிய அடிவருடிக் கூலித் தமிழறிஞர்கள், பேர்—ஆசிரியர்கள் போன் றோராலும் திரைப்பட மயக்கத்திலும், தன் நிலை உயர்வு ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட ஆரவார அரசியற்காரர்களாலும் திசை திரும்பிவிட்ட இன்றைய தமிழர்களுக்குத் தென்மொழி, தமிழ்நிலம் போலும் தாளிகைகளின், வீரம் செறிவரிகள் ஒவ்வொரு தமிழனையும் உணர்ச்சிகொள்ள வைக்கின்றன.

நும்போலும் வீரமும் அறிவும் செறிந்தவர்கள் முனையாவிடில் பெரியார்—அண்ணா ஏற்படுத்திய எழுச்சி அவலமுற்றுத் தடி எடுத்தவனை யெல்லாம் தண்டல்நாயகமாக ஏற்கும் இன்றைய தமிழ கத்தில் தமிழின மேம்பாடு என்பது பதற்கனவேயாம்.

ஆதலின் தங்கள் போலும் ஈகவுணர்வுள்ள பெரியோர்களின் செயற்பாட்டின் மூலமே நந்தமிழினத்தின் அடிமைத்தளை நீங்கி அறியாமை விலகித் தன்மானம் பெற்றுத் தலைநிமிர முடியும் என்பது உறுதி. தங்களின் இவ்வரிய இனமானப் பணியில் எங்களின் சிறிய பங்காகத் தமிழின உணர்வுகொண்ட பெருமக்கள் சிலரை அணுகித் தென்மொழிக்கும் தமிழ்சிட்டுக்கும் ஆண்டு உறுப்பாண்மைக் கட்டணம் தண்டல் செய்து அனுப்பியுள்ளோம். இயன்றளவு இன்னும் முயற்சிசெய்து உறுப்பினர்களைச் சேர்த்திட இயலும் என நம்புகிறோம்.

வளர்க நும் தொண்டு! வாழ்க தமிழினம்! துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை.

— ஞா. சேம்சு, காடம்பாறை.

# தென்மொழி


உலக முதற் புலவர்
திருவள்ளுவர்
ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்
1-25
சுவடி - 20; ஓலை - 12 — விலை ஓர் உருபா
குறள் பாடி நட.

# நமக்கு வந்த மடல்கள்.

0: 1024 : தென்மொழி சு. 20, ஒலை 11 ஆசிரியவுரை, 'சிற்றினத்' தலைவர்களுக்கும், மானமுணராத் தலைவர்களுக்கும் நல்ல நெறியுரை. நன்றி. கோ. உள்ஒளி. அறி.இ;ச.இ. வழக்கறிஞர். திருப்பத்தூர். வ.ஆ.

0: 1025 : அன்புள்ளம் கொண்ட மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு மிகுந்த வணக்கத்துடன் எழுதிக் கொண்டது.

'இவை தமிழல்ல' மதிப்புரை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. சொல்லாய்வு அறிஞர் அருளி அவர்களின் சொல்லாய்வு உரை கேட்டவர்கள், தங்களின் மதிப்புரையை ஏற்றுக் கொள்வர். அருளியாரின் அறிவுத்திறனைப் புரிந்துகொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விரும்பாதவர்கள் தங்களின் மேல் உள்ள காழ்ப்புணர்வுடன் தகாதவை கூறுவர். அதைப்பற்றி நாம் பொருட்படுத்த வேண்டாம். ஆனால், மொழிஞாயிறு பாவாணரைப் பற்றிக் குறிப்பிடும் நேரத்தில், அவ்வளவு கடுமையாக அக்குறைகளைச் சுட்டுவது சரியானதுதானா என்று மறு ஆய்வு செய்யும்படி வேண்டுகின்றேன். பாவாணரின் குறைகளைத் தாங்கள் குறிப்பிடாமல் இருப்பது அருளியாரின் ஆய்வை மற்றவர்கள் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் தங்களின் மேன்மையான தொண்டை மறுக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் வழி வகுக்கும் என்பது எமது எண்ணம். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்பதற்கு ஏற்ப பாவாணரால் நம் மொழி, இனம் பெற்ற மிகையான நன்மையைக் கருதி மற்றவற்றை மறக்கும்படி தாழ்மையோடு வேண்டுகிறேன்.

தங்கள் தொண்டன்

— தென்மொழி ச. சின்னத்துரை, நெய்வேலி-3

0: 1026 : அன்புடைய, பாவலரேறு ஐயா!

வணக்கம். கடந்த இருபதாண்டுகளுக்கு, மேலாகத் தென்மொழியையும், தொடக்கநாள் தொட்டுத் 'தமிழ்ச்சிட்டு' 'தமிழ்நிலத்'தையும் பெற்றுப் பயன்பெறும் யான் தங்கள் குளுரைகளுக்குப் பழம்பெருமை நிலைநாட்டவும், சிதைந்த தமிழ்மொழியைக் காக்கவும், அழிந்துவரும் தமிழினத்தைக் காக்கவும், உறுதுணையாக நிற்கும் பொருட்டு, அவற்றைத் தருவிக்கின்றேன். பொருள் நிலையாலும் தொண்டு நிலையாலும் சிறிது காலங்கடந்து உதவியுடன் பங்குபெறுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணிந்து தொடர்க, உங்கள் சீரிய தொண்டு! வெல்க உங்கள் கொள்கை! — மு. தமிழ்நெஞ்சன், இடங்கண்ணி.

0: 1027 : அன்பார்ந்த ஐயா! உங்கள் சிந்தனை ஊற்றுகள் இந்தத் தமிழ்நாட்டிற்கு விடிவெள்ளியாகத் திகழும்! உங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கம் நான் தங்களைக் காணத் துடிக்கிறேன். இவண் தங்கள் மாணவன்.

— இரா. இராமலிங்கம், அமரர்பூண்டி.

0: 1028 : அய்யா அவர்கட்கு வணக்கம்.

நெடுங்காலத்திற்குப்பின் சுவடி 20 ஓலை இதழில் தென்மொழி, ஆற்றல் மிக்க முறையில் ஆசிரியவுரை ஒன்றைப் படைத்திருப்பது கண்டு பேருவகை கொள்கிறோம்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]



தென்மொழி
மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

---

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி
ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன்
தென்மொழி நா. இளமாறன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:20] உ௦கரு கன்னி [ செப் அக் - 84'] [ஓலை - 12

# இந்துமதம், இந்தி, இந்தியா, இந்திரா!



'வர வர மாமியார் கழுதை போல் ஆனாள்' என்னும் ஒரு பழமொழி உண்டு. இந்தியாவின் தலைமையமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் திருவாட்டி இந்திரா காந்தி அம்மையாரின் நடவடிக்கையில் இந்தப் பழமொழி மிகவும் நன்றாகப் பொருந்துகிறது. அவரின் அண்மைக்கால செயற்பாடுகளில் அவரின் உண்மை உருவம் நன்றாக வெளிப்பட்டிருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். தமக்குப் பிடிக்காத மாநில முதலமைச்சர்களை அப்புறப்படுத்துதல், எதிர்க்கட்சிகளுக்கு ஊக்கமளித்து, மறைமுக ஆதரவு காட்டி, மாநில அமைச்சரவைகளைச் சீர்குலைத்தல், எவ்வளவு பெரிய அரசியல் அறிஞர்களாயினும் (தேசாய், சந்திரசேகர், வாச்பாயி

சரண்சிங், செகசீவன்ராம், முதலியோர்) தம்மொடு ஒத்துப் போகாதவரைத் தனிப்படுத்தி அழித்தல், முதலிய அரசியல் நடவடிக்கைகளுடன், மக்களிடம் தமக்கு நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவு தேடித் தமக்குள்ள சாய்காலைப் பெருக்கிக் கொள்ளுதல், தேசிய ஒருமைப்பாடு, இந்திய ஒற்றுமை என்னும் பெயரால் தேவையற்ற இந்துமத உணர்வுகளைப் பரப்புதல், இந்தி மொழியை மீண்டும் பரவலாக்குவதற்கான முயற்சிகளில் துணிந்து ஈடுபடுதல் போன்ற குமுகாய நடவடிக்கைகளையும் அவர் மிகவும் தந்திரமாகச் செயல் படுத்தி வருகிறார்.

இந்திய நாட்டுப் பொதுமக்களும் குறிப்பாக இளைஞர்களும் அரசியல் அறிவு பெறமுடியாத வண்ணம், அவர்களின் மனங்களை விளையாட்டுப் போட்டிகளிலும், தேவையற்ற மதவிழாக்களிலும், திரைப்படப் பொழுது போக்குகளிலும் திசை திரும்புமாறு, அத்தகைய செயல்களுக்கு அளவிறந்து ஊக்கமளிக்கும் போக்கு அண்மைக் காலங்களில் மிகுதியாக ஏற்பட்டு வருகிறது. இதை இந்திரா காந்தியே திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகிறார். தம் கருத்துகளும், உருவமும் மக்களிடையே நன்கு விளம்பரமாகும் படி, வானொலிப் பரப்புதல்களை நேரம் மிகுவித்தும், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைக் கூடுதலாக்கியும் மிகத் தந்திரமாகச் செயற்பட்டு வருகிறார். தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் மள மளவென்று பெரும் பெரும் ஊர்களிலெல்லாம் அமைக்கப் பெற்றும் விரிவாக்கப் பெற்றும் வருவதை மக்கள் உணர்வர். இந்த நிலைகளெல்லாம் அவரின் மக்கள் சாய்கால் மிகுதிப் படுத்திக் கொள்ளும் முயற்சிகளே! பொது மக்களின் நன்மை கருதியே இத்தகைய செயற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதெல்லாம் ஒரு போலியான விளம்பரமே!

இந்து மதம் கடந்த காலங்களில் மக்களிடையில் எவ்வளவு முன்னேற்றத் தடையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைச் சிறிதே வரலாற்றறிவும் நடுநிலையுமுள்ள எவரும் தெளிவாக உணர்வர். அம்மதத்திற்கே வலிவான அடித்தளங்களாக அமைந்துள்ள புராணங்கள், இதிகாசங்கள் முதலிய மூடநம்பிக்கைகள் மிகுதியும் உள்ள கதைகளே யாவும் பல கோணங்களில் எழுதப் பெறுவதும், நாட்டியம், நாடகம், இசை என்னும் கலைகளில் அவை ஊடுருவி அளாவி நிற்கும் நிகழ்ச்சிகளை, வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றுள் அளவிறந்து புகுத்திப் பொது மக்களின் மனங்களை அவை தம்வயப்படுத்திக் கொள்ளும்படி செய்வதும், அவர்களின் சிந்தனைகளை நாட்டில் நடைபெறும் அரசியல், பொருளியல் வீழ்ச்சிகளிலும், சூழ்ச்சிகளிலும் ஈடுபடாதபடி திசை திருப்பம் பண்ணுவதும், கூர்ந்து நோக்கும் திறனுள்ள நாட்டுநலன் கருதும் நல்லவர்களுக்கு விளங்காமற் போகா.

முன்னைவிட, இந்து மத விழாக்களுக்கு இப்பொழுது பெரிதும் விளம்பரங்கள் அளவிறந்து கொடுக்கப் பெறுகின்றன. விநாயக சதுர்த்தி, இராம நவமி, கிருட்டிண செயந்தி, விசயதசமி போலும்

கடவுளர் விழாக்கள் முன்பு அவ்வளவாகக் கொண்டாடப் பெற்றதில்லை. இக்கால் அவற்றிற்குத் தேசிய மதிப்புக் கொடுக்கப் பெறுவதும், வானொலி, தொலைக்காட்சிகளில் அவற்றின் நேர்முக வண்ணனைகளும், காட்சிகளும் இடம் பெறுவதும் கொடுமையிலும் கொடுமை! ஒருபுறம் அறிவியல் வளர்ச்சியிலும், விண்வெளி ஆராய்ச்சியிலும் ஊக்கமும் ஆக்கமும் காட்டுவதாகக் கூறி விளம்பரப் படுத்திக் கொண்டு, மக்களின் அறிவு வளர்ச்சியில் தமக்கு ஏதோ அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் இந்திரா அரசு, மறுபுறம் இது போலும் மூடநம்பிக்கைகளும் அறியாமையும் நிறைந்து, மக்களை முன்னேற்றப் பாதையிலிருந்து அடியகற்றும் இந்துமதக் கூத்தாட்டங்களுக்குப் பெரிதும் துணை போவதும் ஊக்கமளிப்பதும் எத்துணைத் தந்திரமான அரசியல் சூழ்ச்சி என்பதை ஏழைப் பொதுமக்கள் அறவே உணர்ந்து கொள்ளல் இயலாது.

இந்திராவின் ஆரியத்தனமான அரசியல் சூழ்ச்சிகளுக்குப் பெரிதும் கைகொடுத்து உதவும் கருவியாக இந்து மதம் இக்கால் வலிவு படுத்தப்பட்டு வருகிறது. மக்களை மூடநம்பிக்கைகளில் ஆழ்த்தினால்தான், தம் அரசியல் சூழ்ச்சிகளை அவர்கள் உணர முடியாது என்பது இந்திராவின் சாணக்கியக் கொள்கை. இந்தக் கொள்கையையும், இந்திமொழியையும் கருவிகளாக வைத்தே, தேசிய ஒருமைப்பாட்டை நன்கு வேர் ஊன்ற வைத்து விட முடியும் என்று தவறாகக் கணக்குப் போடுகிறார், இந்திரா!

அண்மையில் அவர், இந்தியில் உருவாக்கப் பெற்ற ஓர் அறிவியல் அகராதியைப் புதுதில்லியில் வெளியிட்டுப் பேசுகையில், இந்திமேல் கொண்ட அவரின் தணியாத பற்று நன்கு வெளிப்பட்டு இருக்கிறது. “நாட்டில் ஒருமைப்பாட்டை வலுப்படுத்த இந்தியை இணைப்பு மொழியாக ஏற்பது இன்றியமையாதது. இந்திமொழியைக் கற்பதில் நாடு முழுவதிலுமுள்ள மக்கள் அனைவரும் ஆர்வம் உள்ளவர்களாக உள்ளார்கள். ஆனால் அரசியல் ஊதியத்துக்காக, இதைத் தடுக்க தென் மாநிலங்களில் உள்ள சிலர் முயல்கின்றனர்” என்று இந்திரா காந்தி கூறியுள்ளார். அவர் தென்மாநிலங்கள் என்று கூறியிருந்தாலும், தமிழகத்தையே அவ்வாறு குறிப்பிடுகிறார் என்று கொள்ள வேண்டும். ஏனெனில், வேறு தென்மாநிலங்கள் எதிலும் இந்தியை ஏற்றுக்கொள்ள எவரும் தயங்கியதில்லை. அங்கெல்லாம் மும்மொழித் திட்டமே நடைமுறையில் உள்ளது.

எனவே, இந்தக் கூற்றில் அவரின் இரண்டு உள் நோக்கங்கள் தெளிவாகப் புரிகின்றன. ஒன்று, இந்தி மொழியை எப்படியாவது முழுமையாக இணைப்பு மொழி ஆக்கி விடுவது. இரண்டு, இதற்குத் தடையாக உள்ள தமிழகத்தை எவ்வாறேனும் முறியடிப்பது; அல்லது கீழ்ப்படியச் செய்வது. முன்பெல்லாம் ‘இந்தியைத் தெற்கே உள்ளவர்கள், தாமே விரும்பி ஏற்றுக் கொள்ளும் வரை, ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்கும்’ என்னும் தம் தந்தை நேரு கொடுத்த உறுதி மொழி என்றும் மீறப்படாது என்று கூறி

வத்தவர், இக்கால், அதன் பரவுதலை மிகவும் வலியுறுத்திப் பேசு வதும், அவரின் பேச்சுக்கு இயைப, இந்திமொழி ஆணைக்குழு, அதன் பலவகையான செயற்பாட்டை வலியுறுத்திச் செயல்கள் ஆற்றிக் கொண்டு வருவதும், இந்திமொழி இந்தியாவின் முழுமை யான இணைப்பு மொழியாக விரைவில் ஆக்கப்பட்டு விடும் என்பதை மேன்மேலும் உறுதிப்படுத்துகின்றன.

எப்படியோ, இந்துமதத்தையும் இந்தியையும் பயன்படுத்தி, இந்தியாவை இந்திராவின் வல்லதிகாரத்துக்கே கொண்டு வந்து விட வேண்டும் என்பது அவரின் தனியாய நோக்கம் என்பது வலுப்பட்டு வருகிறது. இந்தியாதான் இந்திரா, இந்திராதான் இந்தியா என்பதே, இந்திராவின் அரசியல் கொள்கை! பொருளியல் கொள்கை! குமுகாயக் கொள்கை! மதக்கொள்கை! மொழிக்கொள்கை என்று ஆகி விட்டது! அதை நிறைவேற்றிக் கொள்ள தமக்குண்டான பலவழிகளிலும் இந்திராகாந்தி முயன்று வருகிறார். அவ்வாறு முயல்கின்ற வகைக்கு மக்கள் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவே, இந்துமதத்தையும், இந்தியை யும் அவர் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கிறார். தேசிய ஒருமைப்பாடு என்னும் வண்ணக் குடை பிடிக்கிறார்; மதவிழாக் களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிறார்; மக்களை மூடநம்பிக்கைகளில் ஆழ்த்த முனைந்து நிற்கிறார். இந்திமொழி வெறியர்களுக்குச் 'கூ' காட்டுகிறார்.

இனி, இன்னொன்றையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந்துமதத்தை மக்களின் அறிவு மழுக்கக் கருவியாகவும், இந்தியை உணர்வு மழுக்கக் கருவியாகவும் பயன்படுத்தி வரும் இந்திரா காந்தி, அளவிறந்த பணக் கவர்ச்சியால்வேறு மக்களைத் தம்வயப் படுத்தப் பார்க்கிறார். குறிப்பாகத் தம்மை அஃதாவது தம் கட்சியை வரவேற்காத மாநிலங்களில் உள்ள மக்களைத் தம் பண வலிவால் இழுத்துத் தமக்கு ஆதரவு சேர்த்துவிட வேண்டும் என்று முயற்சி செய்கிறார். எடுத்துக் காட்டாகப் புதுவையில் தமக்கு மக்கள் ஆதரவாக இல்லை என்பதாலேயே, குடியரசுத்தலைவர் ஆட்சியை இன்னும் அங்கு வைத்திருக்கும் அதே வேளையில், அங்குள்ள மக்களைத் தமக்கு ஆதரவாகத் தம் கட்சியில் சேர்க்கும் முயற்சியை மிகவும் விரைவாகவும் முடுக்கமாகவும் செய்து வருகிறார். அண்மையில் புதுச்சேரியில் நடந்த அரசியல் குத்து வெட்டுகளுக்கு அதுவே காரணம் என்றும், அங்கு இந்திராப் பேராயத்தில் (கட்சியில் மட்டுமே) சேர்பவர்களுக்கு உரு. 5000 (கவனிக்கவும், ஓர் உறுப்பினர் கட்சியில் சேர உருபா ஐயாயிரம்) வரை தரப்படுகிறது என்றும் பரவலாகப்பேசப்பெறுகின்றன. அங்கு உள்ளூரில் உள்ள இந்திராப் பேராயக் குட்டி அரசியல் தலைவர்கள், அக்கட்சியில் சேரும் வேண்டுகைப் (விண்ணப்பப்) படிவத்தை மட்டும் ஒன்று 100 உருபா விலைக்கு விற்கிறார்களாம்! எப்படி இருக்கிறது இந்திராவின் அரசியல் சாணக்கியம்.

இப்படி சாமம், (அமைவாகப் பேசி உடன்பாட்டுக்குக் கொணர்வது), பேதம் (எதிர்க்கட்சியில் உள்ள மக்களை வேறு